பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 29 | செவ்வாய்க்கிழமை | (13.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 207

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

## கருணாவுடன் அரசுக்குத் தொடர்பில்லை

# சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும்

# எச்செயலிலும் அரசாங்கம் ஈடுபடாது

## விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மங்கள சமரவீர பதில்

(நமது நிருபர்)

**இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மிக விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருப்பதால் அதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் எச்செயலிலும் அரசாங்கம் ஈடுபடமாட்டாதென்று ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணாவுக்கு இலங்கை அரசு ஆதரவளித்து வருவதாக விடுதலைப் புலிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருவதை மறுத்து பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகக் கருணாவின் பேட்டி ஒலிபரப்பப்பட்டதையடுத்து அரசின் மீதான விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு காட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் அமைச்சர் மங்கள சமரவீர பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட தளபதி கருணாவுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விளம்பரம் கொடுக்கும் வகை

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஜே.வி.பி. கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை கடுமையாக விமர்சித்தும் விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டுமென்று வலியுறுத்தியும் கொழும்பிலும், கொழும்புப் புறநகர்ப் பகு...

...களையொழிக்க வேண்டும்' என்று அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினர் பிரசுரம் வெளியிட்டிருப்பது, இராஜதந்திர வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

ஆறு மாகாண சபைகளுக்கு மான தேர்தலில் ஐக்கிய மக்கள்...

## தலைமையகத் தளபதியை நியமிப்பதில் இழுபறி

(கொழும்பு)

இலங்கைப் படைகளின் தலைமையக தளபதியாக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க பாதுகாப்பு அமைச்சு குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்தப் பொறுப்பில் இருந்த முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இளைப்பாறிய பின்னர், அந்த வெற்றிடத்திற்கு கடற்படை தளபதி வைஸ் அட்மிரல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் - தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் இன்று முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான நோர்வேத் தூவர் ஹான்ஸ் பிறஸ்கர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று முற்பகல் கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இச் சந்திப்பு நடைபெறும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் இந்திய-நோர்வே அரசுகளின் வெளியுற அமைச்சர்கள் மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்தும் இச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்படவுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-இராணுவம் வவுனியாவில் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான மாதாந்த சந்திப்பு நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுச் செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல்,மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல் சுசில விஜயசூரிய, பொலிஸ் அத்தியட்சகர் மிஸ்கின் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது உயர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டி குண்டுதாரிக்கும்

கால நிர்வாகக் கோரிக்கையை கடுமையாக விமர்சித்தும் விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டுமென்று வலியுறுத்தியும் கொழும்பிலும், கொழும்புப் புறநகர்ப் பகுதியிலும் ஜே.வி.பியினர் பாரியளவிலான சுவரொட்டிகளையொட்டியுள்ளனர்.

கொழும்பு நகரிலும் சிங்கள மக்கள் அதிகமாக வாழும் தென் பகுதிக் கிராமங்கள், நகரங்கள் எங்கும் நேற்றுப் பரவலாக ஒட்டப்பட்டிருந்த இந்தச் சுவரொட்டிகளில் ஜே.வி.பியினரின் பிரசாரப் பிரிவினரின் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

கருணா விவகாரத்தில் அரசாங்கத்தின் இரட்டை வேடம் குறித்துக் கடுமையான நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வரும் நேரத்தில் 'விடுதலைப் புலி

இராஜதந்திர வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரு வெற்றி பெற்ற சூட்டோடு ஜே.வி.பியினர் மேற்படி பிரசுரத்தினை வெளியிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.(யே)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள் கணிதம் -II
ஆக்கம்:
திரு.க.ஆதித்தன்
ஆசிரியர்

# கொள்ளுப்பிட்டி குண்டுதாரிக்கும் ஐ.தே.க. அங்கத்தவருக்கும் தொடர்பு

## புதிய தகவல் கசிவு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்த பெண், ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர் ஒருவரின் வீட்டில் ஒருவருடத்திற்கும் மேலாகப் பணிப்பெண்ணாக இருந்துள்ளதாகப் பொலிஸ் தரப்பில் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர் கடந்த பொதுத் தேர்தலில கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவரெனவும் இவரது தந்தையார் முன்னைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கையில், சம்பந்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரை நாம் விசாரணை செய்ததுடன் அவரது இல்லத்தையும் சோதனையிட்டோம். ஆனால் தற்கொலைக் குண்டுதாரி அங்கு இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையெனத் தெரிவித்துள்ளனர். (உ-60,10)

# முப்படைத் தளபதிகள் சகிதம் ரட்ணசிறி நேற்று யாழ். விஜயம்

## உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் முப்படைகளின் தளபதிகள் சகிதம் பலாலி விமானப் படைத்தளத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

படையதிகாரிகள் மற்றும் இராணுவத்தினருடனான சந்திப்பின் போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அனுபவிக்கும் கஷ்ட நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இதன்படி இராணுவத்தினருக்குப் புதியவர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படவிருககின்றனர். அவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அரசு திட்டமிட்டிருக்கின்றதென்றார்.

இதேவேளை அமைச்சர் யாழ.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபை அமைச்சுகளை ஜே.வி.பி. பொறுப்பேற்காது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முனணியின் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து குழுவொன்றை அமைக்கவுள்ளன.

நாட்டின் வடக்கு கிழக்கு தவிர்ந்த 7 மாகாண சபைகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் வந்ததையடுத்து அவற்றின் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும நோக்குடனேயே இந்த குழு அமைக்கப்படவுள்ளது.

மாகாண சபைகளின் சிறந்த நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் குறித்து இந்தக் குழு ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும்

(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீரிழிவு நோயுடையோர் மது, புகைத்தல் ஆகியவற்றை முற்றாகத் தவிர்த்தல் நலம்

## மருத்துவ விளக்கம்

கா. வைத்தீஸ்வரன்
இளைப்பாறிய சுகாதாரக் கல்வியாளர்

சலரோகம் இன்று எம் மக்கள் மத்தியில் ஓர் முன்னணிப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. இந்நோய் காரணமாக உடலின் இயல்புநிலை அல்லது ஆற்றல் பாதிப்படைவது மல்லாமல் இந்நோய் காரணமாக பலவித நோய்களும் ஏற்படுகின்றது. தொடர்சிகிச்சை, நோயாளர் பராமரிப்புக் குறையில் எளிதில் மரணமும் சம்பவிக்க முடியும். அமைதியற்ற வாழ்க்கைநிலை, மன உளைச்சல் முதலியன இந்நோய அதிகரிப்பதற்குரிய காரணிகளாகவும் அமைய முடியும். வயிற்றுப் பகுதியில் உள்ள 'சதையீ' இல் **(Pancreas)** காணப்படும் இலங்கக்கான் கலங்களில் இருந்து சுரக்கப்படும் 'இன்சுலின்' செயற்பாடு பாதிப்படைவதனால் ஏற்படும் நோய் சலரோகம் எனப்படும்.

இந் நோயை நீரிழிவு எனவும் குறிப்பிடுவர். உடலில் உள்ள கலங்கள் யாவற்றிற்கும் அதன் செயற்பாட்டிற்கும் குளுக்கோஸ் இன்றியமையாததாகும். இரத்தத்தில் காணப்படும் குளுக்கோஸை கலங்களுக்கு எடுத்துச் செல்வது இன்சுலின் ஆகும். போதியளவு இன்சுலின் சுரக்காவிடின் இரத்தத்தில் காணப்படும் குளுக்கோஸ் சலத்துடன் வெளியேற முடியும். அத்துடன் இரத்தத்தில் குளுக்கோஸ் கூடுதலாகக் காணப்படின் இரத்தக் குழாய்களில் (சிறு நாடிகள் உட்பட) கொழுப்புப் படியும் தன்மை இயல்பாக மேலோங்க முடியும். இக் காரணத்தினால் உடலின் சகல பாகங்களும் பாதிப்படையும்.

### முக்கிய ஆரம்ப அறிகுறிகள்

அடிக்கடி சிறுநீர்கழித்தல், இரவில் பல தடவைகள் சலம் கழிக்க நேரிடல், அளவுக்கு அதிகமான தாகம், உடல் நிறை குறைதல், கூடிய பசி, விபரிக்க முடியாத உடற்சோர்வு, பாதங்களில் சேறு பூசியது போன்ற உணர்ச்சி அற்ற நிலை, கை, கால்களில் விறைப்பு, அத்துடன் சுள்ளிட்டுக் குத்துதல், கழுத்துப் பின்புறம், உடல் பின் பகுதிகளில் கருக்கள், கட்டிகள் தோன்றுதல், ஆண் உறுப்பு, பெண் உறுப்புகளில் பங்கசு காரணமாகச் சொறியுடன் கூடிய அழர்ச்சி, எளிதில் கோபமடைதல் முதலியன.

இவற்றில் ஏதாவது அறிகுறிகளை நாம் காணின் காலம் தாழ்த்தாது சலப்பரிசோதனை செய்வதன் மூலமே இந்நோயை இனம் காணமுடியும். இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமே இந் நோயை நிச்சயிக்கலாம். மேலும் காலின் தசைகளில் பிடிப்பு ஏற்பட முடியும். நரம்புகளில் ஏற்படும் நேரடித் தாக்கத்தினால் கை, கால்கள் விறைப்பு அடையவும், உணர்ச்சி அற்றுப் போகவும் முடியும். தோற்பரப்பில் சரிவர இரத்த ஓட்டம் இல்லாத காரணத்தினால் புண்கள் மாறாது. நீண்ட நாட்கள் செல்லும். அத்துடன் குறிப்பிட்ட பகுதிகள் நீல நிறமாக மாற முடியும். இதன் காரணமாக நோயாளியைக் காப்பாற்றும் பொருட்டு அவயவங்கள் (விரல், கை, கால் முதலியன) துண்டிககப்பட வேண்டிய நிலைமை உருவாக முடியும்.

### நோய் காரணமாக ஏற்படக் கூடிய சிக்கல்கள்

குருதிக் குழாய்களில் மிதமிஞ்சிய குளுக்கோஸ் காணப்படும். இதனால் மேலதிகமான கொழுப்பு, இக் குழாய்களில் படியும், குருதியோட்டம் படிப்படியாகக் குறைவடையும். முற்றாகவும் தடைப்படவும் முடியும்.

இக்காரணங்களினால் அதி இரத்த அழுத்தம், பாரிசவாதம், மாரடைப்பு இந்நோயாளர்களுக்கு ஏற்படுவதை நாம் அவதானிக்கலாம். மேலும் நரம்பு பாதிப்பு அடைவதனால் கைகால் விறைப்பு, கண்பார்வை படிப்படியாகக் குறைதல், சலப்பை, பாலியல் உறுப்புகள், சருமம், கை, கால் முதலியவற்றில் எளிதில் தொற்றுகள் ஏற்படவும் செய்யும். சில சமயங்களில் உயிரைப் பாதுகாப்பதற்காகக் கை, கால் விரல்கள் துண்டிக்கப்படல், ஆண்மை குறைவடைதல், சிறுநீரகம் பாதிப்பு, அதன் செயற்பாடு இழக்க நேரிடல் முதலியன சம்பவிக்க முடியும்.

### நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள

ஆரோக்கியதான வழிமுறைகளைக் கடைப்பிடித்தல், சமச்சீர் உணவு எடுத்தல் (பலவகை உணவுகளைச் சேர்த்து உண்ணுதல்; நார்ப் பொருள் உணவுகளை கூடியளவில் உண்ணுதல், உடற் தேவையறிந்து அளவோடு உண்ணுதல்) ஒருவேளை உணவைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து உண்ணுதல் முதலியன. உயரத்திற்கு ஏற்ற நிறைபேணல், அதியூட்டம் தவிர்த்தல், உடற்பயிற்சி, விரைவு நடை மேற்கொள்ளல்.

மேலும் கூடிய பசி காணப்படினும் மனக்கட்டுப்பாட்டுடன் உண்ணப் பழகவேண்டும. உடல் உழைப்பு மிக மிக அவசியம். முட்டை, கொழுப்பு, இறைச்சி, பொரித்த மீன்கள், ஐஸ்கிரீம், பாயாசம், சீனி, இனிப்புப் பண்டங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

மதுபானம், புகைத்தலை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்

தேங்காய் எண்ணெய், கொழுப்பு உணவு முதலானவைகளை கூடுதலான அளவு குறைத்தல் வேண்டும். காய்கறி இலை வகைகளில் பலவகை ஊட்டம் உண்டு. அத்துடன் உண்ணும் போது வயிறு நிரம்புவதால் மனத்திருப்தி ஏற்படமுடியும். மேலும் மலச்சிக்கல் ஏற்படமாட்டாது. பிரயாணம் செய்யும் வேளைகளில் தாம் சலரோகத்திற்கு சிகிச்சை பெறுவதற்கான அட்டையை வைத்திருத்தல் அவசியம். தாம் யாரென மயக்கமடைந்த வேளைகளில் இனம் காணமுடியும். வூழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறும் காரணத்தினால் இந்நோயுடன் சந்தேஷமாக வாழக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். சரிவர சிகிச்சை பெறும் நோயாளர் 40 வருடங்களுக்கு மேலாகவும் இந் நோயுடன் சந்தோஷமாகத் தமது வாழ்க்கையை வடிவமைத்திருப்பது கண்கூடு. இந்நோயாளர் மத்தியில் மறதி மேலெழும் காரணத்தினால் குடும்பத்தில் உள்ள ஏனையவர்கள் இச் சிகிச்சையில் முக்கிய கவனம் செலுத்துதல் மிக அவசியம்.

பதற்றமடைதல், எளிதில் கோபமடைதல் முதலானவைகள் ஏற்படுவதால் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்குரிய வழமுறைகளைக் கடைப்பிடித்தல் மிக அவசியம். உ+ம் : ஆழச்சுவாசித்தல், யோகாசனப் பயிற்சி, தியானம் முதலியன. ஆழச் சுவாசிப்பதன் மூலம் பிராணவாயு உடல் உட்கலங்களை நிறைவாக போசிக்கமுடியும். அத்துடன் மனம் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் அமைய முடியும். இதன் காரணமாக சலரோகம், அதி இரத்த அழுத்தம், பாரிசவாதம் மன உளைச்சல் முதலானவற்றைக் கட்டுப்படுத்த முடியும். கோதுமை மா உணவுகளை முடியுமானவரை தவிர்த்தல் வேண்டும். (பாண், பணிஸ்)

தவிடு சேர் அரிசி, நார்ப் பொருள் உணவு கூடுதலாக உண்ணுதல் இனிப்புணவு, பொரியல் வகை, ருசியுணவுகளை முற்றாகத் தவிர்த்தல், கூடிய நன்மைபயக்கும். மனதில் அமைதி வாழ்க்கையை அமைத்தல் வேண்டும். குடும்பத்தில் தாய், தந்தையருக்கு இன் நோய் இருப்பின் பிள்ளைகளுக்கு இந் நோய் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. எனவே இக் குடும்பத்தினர் சிறுபராயத்தில் இருந்தே ஆரம்பப் பராமரிப்பைக் கடைப்பிடிப்பின் இந் நோய் அறவே வராது இருக்க முடியும். அல்லது வர நேரிடின் பல வருட காலம் தாழ்த்திச் சம்பவிக்க முடியும்.

### ஆரம்ப பராமரிப்புகளாவன

1. கலோரி குறைவான கூடிய நார்ப் பொருள் உணவுப்பாவனை ஊக்குவிக்கப்படல்வேண்டும். **(Lowcalorie- High Fivre diet)** காய், கறி இலைவகை, பழவகை முதலியன.
2. முடியுமானவரை சீனி, கொழுப்புணவுகளை அளவோ்டு பாவித்தல் வேண்டும். (தேங்காய்ப்பால், பட்டர், சீஸ், சொக்லட் வகைகள், இனிப்பில் தயாரித்த உணவு முதலியன)
3. பருப்பு, கடலை, பயறு, கௌபி, சிறிய மீன் கூடிய அளவு பாவிக்க முடியும். இறைச்சி முட்டை முதலியன அளவுடன் பாவிப்பது நல மாகும்.
4. உடல் உழைப்பு மிகவும் அவசியமாகும். தேகாப்பியாசம் (மூத்தோர் - வேகநடை) தினமும் 1/2 மணித்தியாலம் தன்னும் மேற்கொள்ளப்படவேண்டும்.
5. புகைத்தல் முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும்.
6. மனஉளைச்சல் அற்ற எளிமையான வாழ்க்கை முறை மிகவும் இன்றியமையாததாகும்.

### நோயாளர் கவனம் எடுக்க வேண்டிய அம்சங்கள்

☆ எடுக்கும் மருந்துகள் கிரமமாக உரிய வேளையில் தினமும் எடுத்தல் மிக அவசியம். இம் மருந்தின் தாக்கம் சில மணித்தியாலங்கள் மாத்திரம் தான் உண்டு. ஒழுங்கீனமாக இம் மருந்துகள் எடுக்கில் பல வித பக்கப் பாதிப்புகளை ஏற்படுத்தும். மாதா மாதம் நீர் ஆகாரம் இன்றி (10,12 மணித்தியாலங்களின் பின்) இரத்தம் சோதிக்கப்படல் வேண்டும். தினமும் தேகாப்பியாசம் மிக அவசியம். இதனால் உடலின் சகல பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் பரவும். உடற் சுத்தம் மிக அவசியம்.

☆ கை, கால் விரல்களை தினமும் நன்றாகக் கழுவி உலர்த்திய பின் இரவு நித்திரை கொள்ள வேண்டும். கண்டிப்பான உணவு மிக அவசியம்.

☆ வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறும் வேளைகளில் சலரோக நோய்க்கான சிகிச்சையும் இணைந்து இருத்தல் மிக அவசியம். அத்துடன் வைத்தியர்களுக்குத் தான் ஒரு சலரோக நோயாளி என்பதை நினைவூட்டல் மிக முக்கியமானதாகும்.

☆ நோயாளி மயக்கமடைதல் ஆபத்தானதாகும். இவ் வேளைகளில் உடல் தள்ளாடுதல், எளிதில் கோபமடைதல், கடும் பசி, கூடிய வியர்வை, மனக்குழப்பம், இதயத்துடிப்பு வேகமடைதல், மயக்கமடைதல் என்பன நிகழ முடியும். எனவே, ஆரம்ப அறிகுறி தென்படின் சீனி அல்லது குளுக்கோஸ் உட்கொள்ளவேண்டும். 15 நிமிடங்களில் தெளிவு ஏற்படவில்லையெனின் வைத்திய உதவியை காலம் தாழ்த்தாது பெறல் அவசியமாகும். உடல் நலிவுறு வேளையில் சுவாசத் தொகுதி தொற்றுநோய் சர்மரோகம் முதலியன ஏற்படலாம். உடல் பருமன், உடல் உழைப்புக் குறைவடைதல், உள நெருக்கீடுகளாலாகும் காரணிகளினால் இந் நோய் எளிதில் சம்பவிக்க முடியும்.

☆ பப்பாசிப்பழம், கதலி வாழைப்பழம் என்பவற்றை அளவோடும் ஏனைய பழங்களை மிகவும் குறைந்த அளவிலும் உண்ண முடியும். அல்லாதுவிடின் முற்றாகத் தவிர்க்கலாம். காலை உணவு குரக்கன் மா, ஆட்டாமா அல்லது பயறு, கடலை, கௌபி, கோதுமை என்பவற்றில் தயாரித்த உணவு உற்கொள்ள ஊக்குவிக்கப்படவேண்டும்.

☆ கொழுப்பு நீக்கிய பால் வகைகளை பருகவேண்டும். நொறுக்குத் தீனியாக சோயா, கௌப்பி, கதலி வாழைப்பழம் என்பவற்றை உண்ணலாம்.

☆ இயலுமான அளவு காய்கறி, இலைவகைகள் பாவிக்க முடியும். விரும்பிய அளவு மீன் பாவிக்க முடியும். கோழி இறைச்சி கிழமையில் ஒரு தினம். நோயாளி தனது சலத்தைத் தினமும் வீட்டில் சோதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தான் உண்ணும் உணவை கட்டுப்பாடாக எடுக்க முடியும்.

☆ சலத்தை சோதிக்கும் வழிமுறைகளாவன

ஒரு பரிசோதனை குழாயில் $1^1/_2$ அங்குல உயரத்திற்கு (5 மில்லி லீற்றர்) பெனடிக் கரைசலை எடுக்கவும். அதற்குள் 8 சொட்டுச் சிறுநீர் விட்டுச் சூடாக்கவும். நீல நிறமாக உள்ள பெனடிக்ற் கரைசல் நிறம் மாறினால் அதில் குளுக்கோஸ் உண்டு. அதன் விபரம் வருமாறு.

1) நீலநிறமாக இருப்பின் - குளுக்கோஸ் இல்லை **(Blue)**

2) பச்சை நிறமாக இருப்பின் - குளுக்கோஸ் 1% உண்டு. **(Green)**

3) செம்மண் நிறமாகில் - குளுக்கோஸ் 1.5 வீதம் உண்டு. **(Orange)**

4) சிவப்பு நிறமாக மாறின் குளுக்கோஸ் 2.0 வீதம் உண்டு. **(brick red)**

### சமூக விழிப்புணர்ச்சி

எமது சமூகத்தில் தற்போது இந் நோய் காரணமாகப் பலர் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். தற்போதைய அமைதியற்ற வாழ்க்கை முறை, மன உளைச்சல் மேலோங்கல், உடல் உழைப்பு அற்ற வாழ்க்கை, இயல்பு வாழ்க்கை இன்மை முதலியன இந்நோய் அதிகரிப்புக்குக்கு காரணிகளாக அமைய முடியும். மன அமைதி பேணி வாழக்கற்றுக்கொள்ளல் மிகவும் இன்றியமையாததாகும்.

### வைத்திய சிகிச்சை பெறுவோர் தொடர் சிகிச்சை பெறல் மிகவும் அவசியம்

இடை நிறுத்தல் பக்கப்பாதிப்பைத் தோற்றுவிப்பதுமல்லாமல் கவனம் இன்றி இருப்பின் மரணத்தை ஏற்படுத்த முடியும். எனவே நாம் இந்நோயுடன் இயல்பு வாழ்க்கை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வைத்திய பரிசோதனை அல்லது சத்திர சிகிச்சைக்கு ஆயத்தம் செய்யும் போதுதான் அநேகமானோர் இந் நோயின் தாக்கத்தை அறிகின்றனர். இந் நிலை மாறி நாம் விழிப்புடன் இருந்து நோயை வராமல் பாதுகாத்துக் கொள்ளல் வரவேற்கத்தக்க முயற்சியாகும். ☐

நன்றி 'சுகவாழ்க்கை'

---

## இறுதி உடன்பாட்டை எட்டுவதில் சிக்கல்

(கொழும்பு)

உலக வர்த்தக உடனபடிக்கை குறித்து பேச்சுக்களை நடாத்தி வரும் ஐரோப்பியப் பிரதிநிதிகள் இறுதி உடன்பாட்டை எட்டுவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

விவசாய உற்பத்திகளுக்கு மானியம் வழங்குவது தொடர்பாக இணக்கம் காணுவது தொடர்ந்தும் தாமதமடைந்து வருகின்றது. உலக வர்த்தக ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் 147 நாடுகளுக்கும் இடையிலான இறக்குமதிக் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பாக இம் மாத இறுதிக்குள் இணக்கம் காணப்படவேண்டுமென உலக வர்த்தக ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படுகின்ற போதும் இந்தக் காலப்பகுதிக்குள் ஐரோப்பிய, அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகளுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்படுமா என்பது குறித்துப் பெரும் சந்தேகம் நிலவுகின்றது.

(உ-18)

---

## வீர முரசம் எழுச்சி நிகழ்வு

(திருநெல்வேலி)

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையில் கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாசாலையில் நேற்று இரவு 7.00 மணிக்கு 'வீரமுரசம்' எழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

கரவெட்டி மேற்கு ஊரகக் கிளைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.


தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாக இந் நிகழ்வில் விளக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன.(உ-43)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004


**கணிதம் II** ஆக்கம் :
திரு. க. ஆதித்தன் கணித ஆசிரியர்,
**மணி - 3** யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
சுன்னாகம்.

1) a.தரப்பட்ட செவ்வகத்தின் நீளம் (x-2)cm அதன் அகலம் (x-8)cm அதன பரப்பளவு $391 cm^2$ எனின்.




(i) பரப்பளவை x இல் காண்க.
(ii) x இல் உள்ள பரப்பளவையும், தரப்பட்ட பரப்பளவையும் கொண்டு ஒரு இருபடிச்சமன்பாடு அமைக்க.
(iii) அதனை தீர்த்து நீள, அகலங்களை காண்க.


b. உருவில் AD=CDஆகும்.$A\hat{C}D$ இன் இருகூறாக்கி CO ஆகும். $D\hat{A}C=40^0$உம் $A\hat{B}D=45^0$உம் ஆகும்.
பின்வரும் கோணங்களை காண்க.
(i) $A\hat{C}D$
(ii) $A\hat{D}B$
(iii) $B\hat{A}D$
(iv) $B\hat{O}C$




C. I பொருள் ஒன்று குறித்த விலையில் 8% கழிவு கொடுத்து விற்பனை செய்யும் பொழுது விற்பனை விலை ரூபா 2760 எனின்
(i) பொருளின் குறித்த விலை யாது?
(ii) பொருளின் கொள்விலை ரூபா 2500 எனின் இலாபத்தின் சதவீதம் யாது?

d (i)$9^{(x-1)}=729$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.
(ii) மடக்கை அட்டவணை பயன்படுத்தாது பெறுமானம் காண்க.
அ) $2\ell g6+\frac{1}{2}\ell g\ 625-1/3\ell g\ 729$.
ஆ) $\ell g4+\ell g\ 25$

2.அ) கீழே தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடையறிக்க.
i. $n(A^{|})$ இன் பெறுமானம் யாது?
ii. தொடை $A\cap B$ இன் பெறுமானம் யாது?
iii. $n(A\cap B)^{|}$ இன் பெறுமானம் யாது?





ஆ) ஒரு கிராமத்தில் உள்ள 50 குடும்பங்களில் 40 குடும்பம் வானொலி பெட்டியும், 18 குடும்பங்கள் தையல் இயந்திரமும் வைத்திருக்கின்றனர் 8குடும்பங்கள்,தையல் இயந்திரம் மட்டும் வைத்திருக்கின்றனர்.
(i) இத்தகவல்களை வெண்ணுரு ஒன்றில் குறிக்க.
(ii) வானொலிப் பெட்டி,தையல் இயந்திரம் இரண்டையும் வைத்திருக்கும் குடும்பங்கள் எத்தனை?
(iii) வானொலிப் பெட்டியோ தையல் இயந்திரமோ ஒன்றையும் வைத்திராத குடும்பங்கள் எத்தனை?

3. நேர்விளிம்பு, கவராயம் cm/mm அளவுச்சட்டம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி பின்வருவனற்றை செய்க. அமைப்புக்கோடுகளைத் தெளிவாக காட்டவும்.
(i) MN=6cm,No=4.5cm MNo=$90^0$,oP=3.5cm.MN சமாந்தரம் OP ஆகவுள்ள சரிவகம் MNOPஐ அமைக்க.
(ii) M இல் இருந்தும்O வில் இருந்தும் சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.
(iii) $\Delta$ NOP இன் சுற்றுவட்டத்தை அமைக்க.
(iv) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.
(v) MT=OT ஆகுமாறு. வட்டநாற்பக்கல் MNOT ஐ வரைக.

4.
ரூபா 15000 பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கும் பொழுது,முற்பணமாக அதன் பெறுமதியின் 20% செலுத்தப்படவேண்டும்.மீதியை 12சம மாத தவணையில் செலுத்துதல் வேண்டும். இக்கடனுக்காக நிறுவனம் வருடத்திற்கு24%வட்டியை அறவிடுகின்றது.
(i) முற்பணமாக செலுத்தப்படும் தொகையாது?
(ii) முற்பணம் ஒன்றில் செலுத்தியபின் மீதிப்பணம் எவ்வளவு?
(iii) தவணை ஒன்றில் செலுத்த வேண்டிய கடன் தொகையின் பகுதியைக் காண்க.
(iv) அவர் செலுத்தும் மொத்த வட்டியைக் காண்க.
(v) ஒரு தவணையில் வட்டியுடன் செலுத்தும் கட்டணம் யாது?

5.
(a) தரப்பட்ட $\Delta ABC$ யில் $CD\perp AB$.
$AB=2x$ cmஉம் $CD=x$cm உம் ஆகும்.
இதில் இருந்து AB யின் நீளத்தை 4cmஆலும் உயரம் CD ஐ 2cmஆலும் குறைத்து புதிய $\Delta$ ஒன்று உருவாக்கப்படுகின்றது.




(i) புதிய முக்கோணியின் அடியின் நீளத்தைக் காண்க.
(ii) புதிய முக்கோணியின் உயரத்தைக் காண்க.
(iii) புதிய முக்கோணியின் பரப்பளவு $y\ cm^2$ எனின் $y=x^2-4x+4$ எனக் காட்டுக

b) மேற் குறித்த சார்பு $y=x^2-4x+4$ இன் வரைபை வரைவதற்கு பெறப்பட்ட $x$ இனதும் $y$ இனதும் . பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.


| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 9 | - | 1 | - | - | 4 | - |

(i) இவ்வட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
(ii) வழங்கப்பட்ட வரைபுத்தாளில் xஅச்சுவழியே10 சிறு சதுரங்களை ஓர் அலகும் அச்சு வழியே பத்து சிறு சதுரங்கள்,ஓர் அலகும், என கொண்டு அளவிடைக் கேற்ப மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

C) உமது வரைபை பயன்படுத்தி.
(i) முக்கோணியின் பரப்பளவு $9cm^2$ ஆகும பொழுது,முக்கோணியின்பெறுமானம்யாது?
(ii) முக்கோணியின் பரப்பளவு $9cm^2$ஆகும் பொழுது,முக்கோணியின் நீளத்தையும்.உயரத்தையும் காண்க.
(iii) $x$ ஆனது 2என்னும் பெறுமானத்தை எடுக்கும் பொழுது முக்கோணியிற்கு என்ன நடைபெறும்.


6. அ) 4,6,8,............என்ற தொடரில்
(i) 120 இத்தொடரில் எத்தனையாவது உறுப்பு
(ii) 120 வரை உள்ள உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க.
b) ஒரு பெருக்கல் விருத்தியில் 3ஆம் உறுப்பு 20ஆகவும் அதன் 6ஆம் உறுப்பு 160ஆகவும் உள்ளது.
(i) இவற்றைக் கருத்தில் கொண்டு.பொருத்தமான இருசமன் பாடுகளை a,x சார்பில் காண்க.
(ii) இருசமன்பாடுகளையும் தீர்ப்பதன் மூலம் இவ்விருத்தியின் முதலாம் உறுப்பு,பொதுவிகிதம் ஆகியவற்றைக் காண்க.
(iii) இவ்விருத்தியின் முதல் பத்து உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

7. (a) உருவில் வட்டமையம் 0 ஆகும்.
A,B, C,D என்பன பரிதியில் உள்ள புள்ளிகளாகும்.
$A\hat{O}B=X^0$, $A\hat{C}B=Y^0$,
$A\hat{D}B=Z^0$ எனின்




(i) $x^0,y^0$ என்பவற்றிற்கிடையிலான தொடர்பைத் தருக.
(ii) $x^0=90^0$ எனின் $z$இன் பருமனைக் காண்க.

(b) உருவில் 0வட்டத்தின் மையம் AD என்பது விட்டம் AB என்பது வட்டத்திற்கு புள்ளி A யில் உள்ள தொடலி BD என்பது வட்டத்தை Cயில் வெட்டுகின்றது.
(i) $\Delta ABD$யும் $\Delta ABC$யும் இயல்பொத்தவை என நிறுவுக.
(ii) $AB^2=BD.BC$ என நிறுவுக.




8. (a) தரம் 11இல் கற்கும் மாணவர்கள் 60 பேர் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் பற்றிய தகவல் பின்வருமாறு:

| புள்ளிகள் | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 | 70-80 | 80-90 | 90-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 3 | 4 | 8 | 9 | 12 | 10 | 5 | 3 | 4 | 2 |


மேலே உள்ள அட்டவணையில் 0-10 என்பது 0 புள்ளிகள் அல்லது 0 இலும் கூட ஆனால் 10 புள்ளிகளிலும் குறைவு என்பதாகும்.
i. ஆகார வகுப்பு யாது?
ii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு இப்பரம்பலின் இடையைக் காண்க.
iii. சித்திப்புள்ளி 40 எனின் சித்தியடைந்தோரின் சதவீதத்தைக் காண்க.

(b) தொழிற்சாலை ஒன்றில் வெட்டப்பட்ட 65 கம்பித் துண்டுகளின் நீளங்கள் கிட்டிய சென்ரிமீற்றரில் பின்வருமாறு:

| கம்பித் துண்டின் நீளம் | 30-45 | 45-50 | 50-55 | 55-60 | 60-65 | 65-75 |
|---|---|---|---|---|---|---|
| மடிறன் துண்டுகளின் எண்ணிக்கை | 27 | 08 | 07 | 05 | 05 | 12 |

i. இப்பரம்பலுக்கான வலையுரு வரையத்தை . வரைக
ii. மீடிறன் பல்கோணியை வரைக

9. (a) ஓர் செவ்வட்டக் கூம்பின் ஆரை 7 cm உயரம் 24 cm எனின் அதன் மொத்த மேற்பரப்பளவைக் காண்க.
(rஆரையுடைய கூம்பின் வளைபரப்பளவு $\pi r\ell$, $\ell$ சாய்வுயரம்)
(b) படத்தில் 21 cm ஆரையுடைய ஆரைக்கோளக் கிண்ணம் ஒன்று காட்டப் பட்டுள்ளது. அதனுள் 7 cm ஆரையுடைய உலோகக் கோளம் ஒன்று இடப்பட்டுள் ளது. கிண்ணம் நீரால் நிரப்பப்பட்டுள்ளது.
i. ஆரைக்கோளவடிவ கிண்ணத்தின் வெளி மேற் பரப்பளவு யாது?
ii. இக்கிண்ணத்தின் கொள்வளவு யாது?
iii. உலோக கோளத்தின் கனவளவு யாது?
iv. கிண்ணத்தில் உள்ள நீரின் கனவளவைக் காண்க.



(08 ஆம் பக்கம் பார்க்க)

**வினாத்தாள்கள் தொடர்ந்தும் வெளிவரும்.**

## இன்று ஒரு தகவல்

# எனக்குள் நான்

ஒரு பெரியவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். நீ ஒரு ஆளா? இரண்டு ஆளா? என்றார். இப்படிக் கேட்டதும் அந்தப் பெரியவர் மீதே எனக்கு சந்தேகம் வந்து விட்டது. அவர் இப் போது நிதானத்திலிருக்கிறாரா? இல்லையா? என்று பார்க்கின்ற எல்லாம் இரண்டிரண்டாகத் தெரிந்தால் அது சந்தேகத்திற்குரிய விடயம் தானே? அதனால் சந்தேகப்பட்டேன். இருந்தா லும் பெரியவர் மீண்டும் கேட்டார். "நீ ஒருத் தனா? இரணண்டு பேரா? என்று. ''நான் ஒரு ஆள் தான்'' என்றேன். ''இல்லை! இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண் டிருக் கின் றோம் ஆனால் நம் ஒவ்வொருவருக்குள்ளும் மூன்று பேர் இருக்கிறோம் என்றார்.

தலையைப் பிய்த்துக்கொள்ளலாம் போல இருந்தது. இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''எப்படி அது?''என்றேன்.''நம்மைப் பற்றி நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோமே. அது ஒரு விதம் .நம்மைப பற்றி அடுத்தவர்கள் நினைக்கிறார்களே அது ஒரு விதம்.நம்மைப் பற்றி நமக்கும் தெரியாமல் அடுத்தவர்களுக்கும் தெரியாமல் இருப்பது ஒரு விதம்.

இதைப்பற்றி விபரமாகச் சொல்வதானால் என் னைப் பற்றி நான் எப்படி நினைத்துக் கொண்டிருக் கிறேனோ அது ஒரு மனிதன். என்னைப் பற்றி நீங்கள் என்னை நினைக்கிறீகளோ அது ஒரு மனிதன். இதைத் தவிர எனக்கும் தெரியாமல் உங்களுக்கும் தெரியமால் எனக்குள் ஒரு மனிதன் இருக்கிறான் .ஆக ஒவ்வொருவருக்குள்ளும் மூன்று மனிதன் இருக்கிறான் என்பது அவரது விளக்கம்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும் இன்னொரு பெரிய வர் என்ன சொல்கிறார் என்றால் நம்மைப் பற்றியே நமக்குத தெரியாத உண்மைகள் நான்கு விதம். ஒன்று நமக்கும் தெரியும் மற்றவர்களுக்கும் தெரி யும். இரண்டு நமக்குத் தெரியும் மற்றவர்களுக்குத தெரியாது.மூன்று நமக்குத் தெரியாது மற்றவர் களுக்குத் தெரியும். நான்கு நமக்கும் தெரியாது மற்றவர்களுக்கும் தெரியாது. இதை நன்கு புரிந்து கொண்டால் கருத்து வேறுபாடு வராது. மனித நேயம் வளரும்.

முதல் விடயத்தை எடுத்துக் கொள்வோம். நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும். உதாரணத்துக்கு நான் சிறிது குள்ளம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இது நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும். இரண்டு பேருக் கும் தெரிந்த உண்மை இது. அதனால் என்னைப் பற்றி யாராவது "அந்த ஆள் அவ்வளவு உயரம் கிடையாது" என்று கூறினால் அதைத் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

இரண டாவது விஷயம் நமக்குத் தெரியும் அடுத்தவர்களுககுத் தெரியாது. ஒருவருக்குப் பரிசு கிடைக்கிறது அதைப் பார்த்து நான் பொறாமைப் படுகிறேன. இருந்தாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் முகத்தில் சிரிப்பை வரவ ழைத்துக் கொண்டு அவரைப் பாராட்டுகிறேன். இது எனக்குத் தெரியும்அடுத்தவர்களுக்குத் தெரியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது இந்த ரகம்.

மூன்றாவது விஷயம் நமக்குத் தெரியாது மற்றவாகளுக்குத் தெரியும். கோபப்படுவது இதற்கு ஓர் உதாரணம். நமக்குத் தெரியாத ஒரு குறையை அடுத்தவர்கள் சுட்டிக்காட்டும் போது நமக்குக் கோபம் வரும்.

நான்காவது விஷயம் நமக்கும் தெரியாது மற்றவர்களுக்கும் தெரியாது. ஒருவன் எரிந்து விழுகிறான் அவனுக்கு இரத்த அழுத்தம் அதனால் அப்படி நடக்கிறான் .அவனுக்கு இரத்த அழுத்தம் இருப்பது அவனுக்கும் தெரியாது அடுத் தவனுக்கும் தெரியாது. அதனால் அவனும் பதிலுக்கு இவன் மேல் கோபப்படுகிறான்.

அதனால நாம் மனித நேயத்துடன் வாழ வேண்டு மானால் நம்மைப் புரிந்து கொள்ளவேண்டும். அடுத தவர்களையும் புரிந்து கொள்ள வேண்டும். பகுத்து அறிய வேண்டும். அது தான் பகுத்தறிவு.

இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு நமது ஆள் ஒருவன் சொன்னான் ."நீங்கள் சொல்வதெல்லாம் சரி தான் சார். அந்த நான்காவது விஷயம் சொன்னீகளே அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததனால் தான் எனக்கும் என் நண்பனுக்கும் நேற்று சண்டைவந்தது "என்றான் . "என்ன விஷயம்?" என்று கேட்டேன். "ஒரு நூறு ரூபா பணம் அதை யார் எடுப்பது என்பதில் எங்களுக்குள் தகராறு" என்றான். "இதில் என்ன தகராறு பணம் யாருடையதோ அவர்கள் எடுக்க வேண்டியது தானே" என்றேன்.''அது யாருடையது என்பது எனக்கும தெரியாது அவனுக்கும் தெரியாது. அதனால் தான் சார் தகராறே" என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வடக்கு- கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு இடைக்கால நிர்வாக சபையே சிறந்த தீர்வு

## அரியநேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற கொடிய யுத்தம் காரணமாக சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கை உரிய முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வழங்கப்பட வேண்டும்.

அப்போது தான் யுத்தத்தினால் சிதைவடைந்துள்ள எமது பிரதேசத்தை முழு நிறைவாகக் கட்டியெழுப்ப அபிவிருத்தி செய்ய முடியும் என தமிழ்த் தேசியக் கூடடமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரிய நேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு திருப்பளுகாமம் பகுதிப் பொது மக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான கனகசபை, திருமதி தங் கேஸ்வரி மற்றும் ஆரியநேந்திரன் ஆகியோருக்கு கடந்த சனிக்கிழமை வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தையொட்டி திருப்பளுகாமம் கண்டமணி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்குதொடர்ந்தும் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வெளிநாட்டு நிதியுதவிகள் எம்மை நேரடியாக வந்தடைய வேண்டுமாயின், எமக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை விரைவில் வழங்கப்பட வேண்டும்.

இல்லையேல், எமது பிரதேசத்திற்கான அபிவிருத்தி என்பது எட்டாக்கனியாகி விடும் .இதற்காகத் தான் எமது தமிழ்த தேசியக் கூட்டமைப்பு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக் கையை வலியுறுத்தி வருகின்றது எனக் குறிப்பிட்டார். (121)

# குண்டுத் தாக்குதலை தனிப்பட்ட சம்பவமாக வர்ணிப்பது கேலிக்கூத்தான விடயம்

## அரசைச் சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அரசாங்கத்துக்குத் தொடர்பிலலாத தனிப்பட்ட தாக்குதல் சம்வமாக கூட்டமைப்பு அரசாங்கம் வர்ணிப்பது கேலிக்கூத்தான விடயம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் இலக்கான அரசாங்கத்தின் அமைச்சா டக்ளஸ் தேவானந்தாவும், காயமடைந்த பொலிஸ் உத்தி யோகஸ்தர்களும் மற்றும் கொல்லப்பட்ட 4 பொலிஸ உத்தியோகஸ்தர்களின் குடும்பத்தவர்களும் அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பற்ற அறிக்கை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள் ளது. கொழும்பில் கடந்த சனியன்று இடம்பெற்ற ஐக் கிய தேசியக் கட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டில் ஐக் கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கொலை கள் மற்றும் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தாக்கு தல் சம்பவம் காரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதிக் கப்பட்டு விடலாம் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்ததையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

உயர்பாதுகாப்பு வலயத்துள் தற்கொலைக் குண்டுத் தாக்கு தலை மேறகொண்ட குண்டுதாரி ஐக்கிய தேசியக்கட்சியின் காலத்திலேயே கொழும்புக்கு ஊடுருவிய தற்கொலைக் குண்டுதாரிகளுள் ஒருவர் எனக்கூறிவரும் அரசாங்கம், ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்த பாதுகாப்பு அமைச்சை கடந்த வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக் கொண்டதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென வும் அவர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் இடம்பெறற பல கொலைச் சம்பவங்களின்போதும் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படாதது போல, இந்தச் சம்பவத்தினா லும் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படாது என்று கூட்டமைப்பு அரசாங்கம் பிரசாரம் செய்து வருவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ள ரவீந்திர ரந்தெனிய, ஐக்கிய தேசியக் கட்சி சமாதான நடவடிக களை முன்கொண்டு சென்றபோது இதுபோன்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதையும் சுட்டிகாட்டியுள்ளார். (உ)

# இராசி பலன்

**13.07.2004**

**(ஆனி 29, செவ்வாய்க்கிழமை)**

**ஏகாதசி முற்பகல் 9.52 மணி வரை**

**கார்த்திகை முற்பகல் 11.58 மணி வரை**

**இராகுகாலம் 3.00-4.30 மணி வரை**

**சுபநேரம் 10.30-12.00 மணி வரை**

**ஏகாதசி விரதம்**

**மேடம்**
அமைதிக்குறைவு, உறவினர் சந்திப்பு, செல் வாக்குக்குறைவு, முயற்சிதாமதம்.

**இடபம்**
வெகுமானம், சயனசுகம், காரிய அனுகூலம் நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
உறவினர் மனஸ்தாபம், பிரயாணம், காரிய அலைச்சல், உஷ்ணவியாதி.

**கடகம்**
பெருமையடைதல், வாக்கு மேன்மை, தொழிலில் நல்ல வருமானம், குடும்ப சுகம்.

**சிங்கம்**
பிறருக்கு உதவுதல், செய்தொழில் நன்மை, முயற்சி கைகூடும், மேன்மை.

**கன்னி**
சரீரப் பிரயாசை, வீண் செலவு, பிரயாணம், மனச் சஞ்சலம்.

**துலாம்**
வீண் பிரச்சினை, காரிய தடங்கல், வாகன பயம், உடல் நலக் குறைவு.

**விருச்சிகம்**
களஸ்திர நன்மை, கௌரவமான நிலை, காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு,

**தனுசு**
பகைவர் நேசம், தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல் நலம், நல்ல வரவேற்பு.

**மகரம்**
தன்னம்பிக்கைக் குறைவு, தொழிலில் மந்த நிலை, காரிய தாமதம், உடல் நலக் குறைவு.

**கும்பம்**
மாதா சுகம், எதிர்பாராத நன்மை, அதிக செலவு, காரிய தாமதம்.

**மீனம்**
அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, செய் தொழில் விருத்தி, வாகன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# பிரார்த்தனை செய்யும் கரங்களை கொண்டு நல்ல சேவையாற்றுங்கள்

## டாக்டர் ஆர்.கணேசமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சேவை மகத்தானது. சேவையின் மூலம் தான் எமது அகங் காரத்தை இல்லாதொழிக்க முடியும். விளம்பரத்துக்காகச செய் யப்படுவது சேவையல்ல. சேவையின் தரத்தினை அது குறைதது விடும் என வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சேவைக் கருத் தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

வட பிராந்திய பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் இணைபுக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு வடபிராந்திய இணைப்பாளர் சட்டத்தரணி ஆர். வசந்தசேனன் தீலைமையில் நடைபெற்றது.

ஆலோசகர் செ. சிவஞானத்தின் ஆசியுரையுடன் ஆரம் பமாகிய இந்நிகழ்வில், வட பிராந்தியத்தில் இருந்து பகவான் பாபாவின் பக்தர்கள் சுமார் 125பேர் வரையில் பங்கு பற்றியிருந் தனர்.

இளைஞர் குழுவின் தலைவரான வைத்தியக் கலாநிதி கணேசமூர்த்தி அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் தன்னலமற்ற வகையில் சேவை செய்ய வேண்டும். சேவையின் முக்கியத்து வத்தினை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் சேவையில் உளமார ஈடுபடும் போது தான் நாம் அதன் பயனைப் பெறுகின் றோம்.

நாம் வாழ்க்கையில் நல்ல சேவைகளைச் செய்தால் அதன் பலன்கள எமக்கு நிச்சயம் கிடைக்கும். பிரார்த்தனை செய்யும கரங்களை விட, சேவை செய்யும் கரங்களே சிறந்தவையாகும். நாம் சேவையில் ஈடுபடும் போது தெளிந்த சிந்தனையுடன் இருத் தல் வேண்டும்.

எமது வாழ்வில் ஆண்டவனுடைய அனுக்கிரகத்தைப் பெற வேண்டுமாயின், சேவையில் உண்மையாகவும்,விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட வேண்டும். எமது சேவைகளின் மூலம் ஆன்மீகம் வளர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் சேவை இணைப்பாளர் கே. ஈஸ்வரலிங் கம்,ஆன்மீக இணைப்பாளர் எஸ். ஆர்.சரவணபவன், வடமராட்சி ஆசிரியர் கே. சிவநேசன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி னர். (16-18)

# ஜப்பானிய மேலவைத் தேர்தல்
# ஆளும் கட்சிக்கு வெற்றி
# ஆயினும் பிரதமர் கஷ்டத்தில்!

(ரோக்கியோ)

நேற்று முன்தினம் ஜப்பானில் இடம்பெற்ற மேலவைத் தேர்தலில் பிரதமரின் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்ற பொழுதும் அவர் பெரும் நெருக்கடியிலேயே உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.





121 ஆசனங்களைக் கொண்ட மேலவையில் 51 ஆசனங்களைப் பெற வேண்டிய நிலையில், உடனடி முடிவுகளின்படி பிரதமரின் லிபரல் ஜனநாயகக்கட்சி போதிய ஆசனங்களைப் பெற்றிருந்த போதும் அவருக்கெதிரான விமர்சனங்களை மௌனிக்க வைக்கக் கூடிய பெரும்பான்மை கிட்டாது என்று கருதப்படுகிறது.

அவரது கட்சி ஆதரவாளர் கள் கூட அவருக்குத் தண்டனை வழங்க இத்தேர்தலைப் பயன்படுத்தியதாக அறிவித்தனர். இருப்பினும் பிரதமர் கொய் சூமியன் கட்சி தேர்தலில் வெற்றி பாதையில் செல்வதைத் தொடர்ந்து ஜப்பானியப் பங்குச்சந்தை விலைகள் திடீரென அதிகரித்தன என்றுமில்லாதவாறு பங்குச் சந்தை உயர் வடைந்திருப்பது. வர்த்தக சமூகத்தினரிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாக ரோக்கியோ பங்குச் சந்தைப் பேச்சாளர் ஒருவர் அறிவித்தார். (யே)

# அமெரிக்க கோடீஸ்வரர்
# ரொக்:பெல்லர் மரணம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் மிகப் பிரபலமான கோடிஸ்வரர்களில் ஒருவரும் இயற்கை வளங்களில் அதிக கரிசனை கொண்டவருமான லோரன்ஸ் ரொக:.பெல்லர் தனது 94 வயதில் மரணமானார்.



உலகப் பிரசித்தி பெற்ற :.போர்ப்ஸ் சஞ்சிகையின் 587 உலக கோடிஸ் வரர் வரிசையில் அவர், 377வது இடத்தை வகித்து வந்தார். 1.5 பில்லியன் டொலர் செல்வங்களுக்கு அவர் உரிமையாளராக விளங்கினார்.

1958ல் அமெரிக்காவின் இயற்கை வளங்கள் பாது காப்புச் சங்கத்தை அவர் ஆரம்பித்ததோடு நாடு முழுவதிலம் பலவேறு சரணாலயங்களையும் பூங்காக்களையும் நிறுவினார்.

1938ல் முதலாம் உலகப் போரில் விமானியராகப் பணியாற்றிய எடிறிக்கன் பேக்கருடன் இணைந்து ஈஸ்ரேர்ண் எயார் லைன்சை ஆரம்பித்த அவர், பின்னர் மக் டொனெல் எயார் கிரா:.ட் கோப்பரேசன், இன்ரெல் கோரப் பரேசன், அப்பின் கொம்யூட்டர் இன் கோப்பரேசன் ஆகிய உலகப் பிரசித்தி பெற்ற நிறுவனங்களையும் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வந்தார். (யே)

# கைதி கடத்தல் விவகாரத்தில்
# பிலிப்பைன்ஸ் கடும் நிலைப்பாடு
# கைதியின் கதி என்னவாயிற்று?

(மணிலா)

பிலிப்பைன்ஸ் பணயக்கைதி அஞ்செலோ டிலாகுரூசுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட 24 மணிநேரகெடு ஞாயிறு மாலையுடன் முடிவடைந்தது. அவரது கதி என்னவாயிற்று என்று இன்னும் தெரிய வில்லை. அதே




நேரம் ஈராக் கடத்தல் காரர்களுக்குத் தலை வணங்கப் போவதில்லை என்று பிலிப் பைன்ஸ் அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஈராக்கிலுள்ள 50 மனித நேயப் பணியாளர்களும் ஓகஸ்ட் 20ஆம் திகதியே நாடு நிரும்புவர் என்றும் கடத்தற் காரருக்குப் பயந்து அந்நாடு இத் திகதியில் மாற்றம் செய்யாது என்றும் வெளியுறவுச் செயலர் டெலியா அல்பேட் தெரிவித்தார்.

யூலை 20க்குள் பிலிப்பைன்ஸ் வீரர்கள் வெளியேறுவதற்கான உத்தரவாதம் வழங்கப் படாவிட்டால் பணயக் கைதி கொலை செய்யப்படுவார் என்று தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். கடந்த சனிக் கிழமை வரை காலக் கெடு விதிக்கப்பட்டு மேலும் 24 மணித்தியாலங்களால் அது நீடிக்கப் பட்டது.

டிலா குரூசின் மனைவியையும் சகோதரரையும் பிலிப்பைன்ஸ்ஸளின் தொழில் கட்சி செயலர் விமான மூலம் ஈராக்கிற்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடாகியுள்ளது. (யே)

# பிரதமர் ரோனி பிளேயர்
# ராஜினாமாச் செய்யார்!

(லண்டன்)

பிரதமர் ரோனி பிளேயர் கடந்த மாத இறுதியில் ராஜினாமாச் செய்யும் தருவாயில் இருந்தார் எனும் செய்தி தவறானதும் மோட்டுத்தனமான துமாகும் என்று பிரதமரின் கல்விச் செயலர் சார்ல்ஸ் கிளார்க் அறிவித்துள்ளார்.



உண்மையில் எங்களது பூரண ஆதரவை நாங்கள் அவருக்கு வழங்கியுள்ளோம் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் வெளியிடப்பட்ட இச் செய்தி தவறானதும் மோட்டுத்தன மானது மாகும் என்று அவர் தெரிவித்தார்.


ஈராக் பிரச்சினையில் ரோனி பிளேயரின் ஈடுபாடு பிரிட்டனில் அவரது செல்வாக்கைப் பெரிதும் பாதித்துள்ள நிலையில் மேற்படி செய்தி பிரிட்டனில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (யே)

## WORLD NEWS
## உலக தரிசனம்

# தொழில் நுட்பப் பிரச்சினையால்
# செய்மதி செலுத்தப்படவில்லை

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

கடந்த சனிக்கிழமை விண்வெளிக்கு ஏவப்படவிருந்த செய்மதியின் றொக்கற் பாகம் ஒன்று சரியாகப் பொருந்தப்படாமையால் அதனை அனுப்பும் பணிகள் 48 மணி நேரம் தாமதித்து வைக்கப்பட்டது.



'ஓரா செய்மதி' என்று பெயரிடப்பட்டுள்ள இது இன்று அதிகாலை கலிபோர்னியாவின் லண்டன் பேர்க் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.


உலகின் சுற்றுச் சூழல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக சுமார் 785 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இச்செய்மதி இரண்டு கட்டமாக விண்ணில் ஏவப்பட்டு விண்வெளியை வலம் வரும் என்று நாஸா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ஓரா விண்கலத்தின் காப்புக் கலம் ஒன்று சரியாகப் பொருத்தப்படாமை கண்டு பிடிக்கப்பட்டதைத் கொடர்ந்தே இதனை ஏவும் பணி இடைநிறுத்தப்பட்டது. (யே)

# தடுப்புச் சுவர் வேலைகளை
# தொடருமாறு ஷரோன் உத்தரவு

(ஜெருசேலம்)

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பொருட்படுத்தாமல் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கு மிடையிலான தடுப்புச் சுவர் கட்டுமானப் பணிகளைத் தொடருமாறு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் உத்தரவிட்டுள்ளார்.



பயங்கரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க இக்கட்டுமானம் பெரிதும் உதவும் என்று இஸ்ரேல் கூறுகின்ற அதே வேளை இது ஒரு சட்ட விரோ தமானதும் பலஸ்தீனியரின் நிலத்தை அபகரிக்கும் முயற்சியுமாகும் என்று பலஸ் தீனர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச நீதிமன்றத் தீர்ப்புக் கெதிரான ராஜதந்திர முயற்சிகளை முடுக்கி விட்டுள்ள இஸ்ரேல் அரசாங்கம், இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு ஆதரவு தேடும் முயற்சியையும் மேற்குலகில் ஆரம்பித்துள்ளது.


425 மைல் நீளமான இந்த தடைச் சுவரில் மூன்றில் ஒரு பங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது சமாதான முயற்சிகளுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் என்று பலஸ்தீனர்கள் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (யே)

# நசுக்கி ஒழிக்க முற்பட்ட எதிரியை துரத்தி அழிக்கும் நிலைக்கு வந்து விட்டோம்

## கேணல் சூசை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கரும்புலி மாவீரர்களின் தாக்குதல்திறனால் எம்மை



நசுக்கி அழிக்க முற்பட்ட எதிரியை துரத்தி அழிக்கும் நிலைக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோரின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி காந்தரூபன் அறிவுச்சோலையில் இடம்பெற்ற கலை அரங்க அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே கேணல் சூசை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒருகாலப் பகுதியில் சிங்கள இராணுவம் எம்மைத் துரத்தி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது நாம் எம்மை தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையினை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது.

ஆனால் இன்று எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கரும்புலி மாவீரர்களின் வீரமிகு தாக்குதல் திறனால் எதிரியைத் துரத்தியழிக்கும் நிலைக்கு நாம் இன்று வளர்ந்திருக்கிறோம். அந்த வகையில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் வழிகாட்டியாக அமைந்துள்ளார்கள் என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் கருத்துரைக்கையில், காந்தரூபன் அறிவுச்சோலைக்கு புலம்பெயர்ந்த நோர்வே மக்கள், அமைப்புக்கள் பல்வேறு உதவிகளைச் செய்து வருவது பாராட்டத்தக்கது. எதிர்காலத்தில் இவ்வாறான அறிவுச்சோலைகளின் ஊடாக நமது சிறார்களின் நலன்களைப் பேணுவது, வீரகாவியமான மாவீரர்களின் எண்ணங்களை நிறைவு செய்வதாகவே அமையும் எனத் தெரிவித்தார். (உ)

# சங்கானை வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## இருவார காலத்திற்கு முன்னெடுக்கப்படும்

(சுதுமலை)

மானிப்பாய்-சங்கானை வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை டெங்கு நோய்த் தடுப்புப் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பணிமனையின் பொறுப்பதிகாரி கே.வர்ணநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இப் பகுதியில் கடமை புரியும் வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களிற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த செள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன் பிரகாரம்,வாரத்தில் ஒவ்வொரு நாளும் தலா இரண்டு பேர் கொண்ட குழுக்கள் பொது மக்களின் வீடுகளிற்குச் சென்று வீட்டுச் சுற்றாடலை அவதானித்து நுளம்பு பெருகும் இடங்களை அவதானிப்புச் செய்து அவற்றை அப்புறப்படுத்தி, வீடு மற்றும் வளவுச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்றனவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளன.

மிகவும் பாரியளவில் கழிவுகள் காணப்பட்டால் அவற்றை ஒரு குறிப்பிட்ட தவணைக்குள் அகற்றுவதற்கு ஏற்றவகையில் கால அவதாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் அக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெற்றுப் பாத்திரங்கள், கழிவுப் பாத்திரங்கள் மற்றும் இளநீர்க் கோம்பைகள், பழைய ரயர்கள் ஆகியவற்றில் நீர்தேங்கி நின்று நுளம்புப் பெருக்கம் அடையும் இடங்களை இனம் கண்டு அவற்றை உடனே அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முதல் ஆறு மாதகாலப் பகுதியில்14 பேர் வரையில் இப் பகுதியில் டெங்குக் காய்ச்சலிற்கு இலக்காகி இருக்கின்றனர். ஆனால், இலங்கையின் பல மாவட்டங்களில் இந் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் தொகை மிக அதிகமாகவே உள்ளது. இதனால் எமது பகுதிகளில் இதன் தாக்கம் மிகவும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே,சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், கிராமிய மட்ட அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஊடாக சிரமதானங்கள் மற்றும் நுளம்பு காணப்படும் இடங்களை கண்டுபிடித்து அழித்தல் ஆகியவற்றின் மூலம் இந்நோயின் தாக்கத்தை இல்லாமல் செய்ய முடியும்.

இதனடிப்படையில் சனசமூக நிலையங்கள் மற்றும் மாதர் சங்கங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகளுக்கு இந் நோயின் கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(252)

### குளிக்கச் சென்றவரை அலை அடித்துச் சென்றது

(காலி)

காலி முகத்திடல் கடற்பரப்பில் நேற்று முன்தினம் குளித்துக் கொண்டிருந்த ஒருவர் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகப் புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் மாலை அப் பகுதியில் காலநிலை சீரற்றுக் காணப்பட்டதுடன் கடும் அலைகளின் மோதலும் காணப்பட்டது. இச் சூழ்நிலையிலேயே அங்கு குளித்துக் கொண்டிருந்த ஒருவர் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவரைக் காப்பாற்றச் சென்ற மற்றுமொரு நபரும் காணாமல் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். காணாமல் போன மேற்படி நபர் இராணுவ வீரரெனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(உ-18)

### பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணிமனை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணிமனைத் திறப்புவிழா நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு காங்கேசன்துறை வீதி மனோகராச் சந்திக்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச)

## மாகாண சபை முறைமையை ஒழிக்கக் கோரும் பிரேரணை ஹெல உறுமய சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

மாகாணசபை முறைமையை ஒழிக்கக் கோரும் பிரேரணை ஒன்றினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

மாகாணசபை முறைமைகளினால் மக்களுக்கு எதுவித நன்மைகளும் இல்லை என்பதன் காரணமாகவே இம்முறை மாகாண சபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய போட்டியிடவில்லை எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் உடுவேதம்மலோக்கா தேரர் தெரிவித் துள்ளார்.

இம்முறை தேர்தல் பல படிப்பினைகளையும் கற்றுத் தந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் உடுவே தம்மலோக்கத் தேரர், இத்தேர்தலின் மூலம் ஜனாதிபதியின் அரசியல் நிலைப்பாட்டுக்கு போதிய அங்கீகாரத்தை மக்கள் வழங்கவில்லை என்பதும், ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்கள பௌத்த விரோதக் கொள்கையையும் மக்கள் தோற்கடித்துள்ளமையும் நன்கு புலப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் பெருமளவான மக்கள் வாக்களிக்காமை மாகாண சபைகளை மக்கள் விரும்பவில்லை என்பதையே கோடிட்டுக் காட்டுவதாகவும் உடுவே தம்மலோக்கத் தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.(உ)

# சமாதான பேச்சுக்களுக்கு இந்தியாவின் ஆதரவு தொடரும்

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வே அரச மத்தியஸ்தத்திலான சிறிலங்காவின் சமாதானப் பேசசுக்களுக்கு தமது தொடர் ஆதரவு என்றும் உள்ளது என இந்தியா வின் புதிய காங்கிரஸ் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பிற்றர்சனை சந்தித்தபோதே இந்தியாவின் அரச பிரதிநிதிகள் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

மே மாதம் இடம்பெற்ற தேர்தல் மற்றும் ஆட்சி மாற்றத்தின் பின்னர், நோர்வேயின் அரச பிரதிநிதிக்கும், இந்தியாவின் புதிய காங்கிரஸ் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பாக கடந்த வார சந்திப்பு அமைந்திருந்தது.

சமாதானப் பேச்சு விடயத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ள இந்திய அதிகாரிகள், இறுதித் தீர்வு காணப்படும்போது அதுகுறித்து இந்தியாவின் கருத்துப் பெறப்பட வேண்டிய அவசியத்தையும் இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

(உ)


வலிகாமம்தென்மேற்குபிரதேசசபை.மானிப்பாய்.
வேலைக்கான கேள்வி அறிவித்தல்–காலநீடிப்பு

01.07.2004ஆந் திகதிய பத்திரிகையில் செயலாளர், வலி. தென்மேற்கு பிரதேசசபையினால் செய்யப்பட்ட வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் கீழே குறிப்பிடப்பட்ட திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

01) கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி:-16.07.2004 வரை

2) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:-19-07.2004 நண்பல் 12 மணி


3) கேள்வி திறக்கப்படும் திகதி:-19.07.2004 பிற்பகல் 2.00 மணி

(பி.விக்டர்)
செயலாளர்
வலி. தென்மேற்கு
பிரதேச சபை,
மானிப்பாய்.

(C/367)




சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்தையொட்டி பல்லசுட்டி, பண்ணாகம் காந்திஜி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்ற கூட்டத்தில் சங்கானை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி ஏ.யோகராஜா உரையாற்றுகிறார்.



யாழ். பிரதேச செயலக யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வலய காரியாலயத்தினால் அண்மையில் கடன் வழங்கும் ஆரம்ப நிகழ்வும் வறிய மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. பயனாளி ஒருவருக்கு வங்கியின் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் கடனுதவியை வழங்குவதையும் அருகில் வங்கி முகாமையாளர் ம.கியூமன் மற்றும் பிரதேச செயலர் ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.




யாழ். மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் முதலாமிடம் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். இப் பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணி தொடர்ச்சியாக 8 வருடங்களாக மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி வருகின்றது. இன்று வவுனியாவில் நடைபெறவுள்ள இவ் வருட மாகாண மட்டப் போட்டியிலும் இவ் அணி பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ்
# மக் லரன் கடும் சவால்
# மைக்கல் சூமாக்கர் வெற்றி

மிகச் சிறந்த தொழில்நுட்பத்தோடு களமிறக்கப்பட்ட புதிய மக் லரன் காரில் கிமி ரய்க் கொனன் விடுத்துவந்த் திகிலூட்டும் சவாலைச் சமாளித்து பெராரி அணியின் மைக்கல் சூமாக்கர் பிரிட்டிஷ்





கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றிபெற்றார்.


போட்டியின் பதினைந்தாவது சுற்றில் ரய்க்கொனன் மைக்கல் சூமாக்கரைக் கடந்துசெல்லும் அளவுக்கு அதி தீவிரமாக வந்து நெருங்கினார். மிக நீண்டநாட்களாக இந்தத்துறையில் இருக்கும் ரய்க் கொனன் உலகின் முதல்தர வீரர்களுள் ஒருவராவார். ஆயினும ஆறுதடவை உலகச் சம்பியன் பட்டத்தை வென்ற மைக்கல் சூமாக்கர் தன்னுடைய 80வது வெற்றியை உறுதிசெய்தார்.

இந்த சீஸனில் மைக்கல் சூமாக்கர் பெறும் 10வது வெற்றி இதுவாகும் மக்லரன் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கார் மிகத் திறமையாகச் செயற்படுவது குறித்து அந்நிறுவனம் திருப்தி வெளியிட்டுள்ளது. (யே)

## டெனிஸ் பகிரங்க போட்டிகள்
# சுவிஸில் ரொஜர் பெடரர்
# பிரிட்டனில் ரஸெட்ஸ்கி வெற்றி

நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற சுவிஸ் பகிரங்க டெனிஸ் போட்டியில் விம்பிள்டன் சம்பியன் கிண்ணத்தை வென்ற சுவிஸ் வீரர் ரொஜ பெடரர் கிண்ணத்தை வென்றார்.





ஐகோர் அன்ரீவை 6-2,6-3,5-7,6-3எனும் செற்களில் அவர் வென்றார். மழையால் பாதிக்கப்பட்ட இப் போட்டியில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் விளையாடிக் களைப்படைந் திருந்த அவர் தனது தாய் மண்ணில் முதற்தடவையாக வெற்றி பெற்றார்.

மறுபுறத்தில் பிரிட்டனில் நடைபெற்ற ஏ.ரி.பி.பகிரங்க ரெனிஸ் போட்டிகளின் இறுதியாட்டத்தில் பிரிட்டனின் கிரெக் ரஸெட்ஸ்கி வெற்றி பெற்றார். அலெக்ஸாண்டர் பொப்பை எதிர்த்தாடிய அவர் 7-6, 7-6 எனும நேர் செற்களில் வெற்றிபெற்றாா. புற்றரைகளில் விளையாடுவதில் அவர் சிறந்தவராகக் கணிக்கப்படுகிறார். (யே)

## ரூர் டி பிரான்ஸ்
# 8வது சுற்றில் நோர்வேயின்
# தோர் ஹஷோவ்ட் வெற்றி

தற்பொழுது நடைபெற்றுவரும் ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியின் எட்டாவது சுற்றில் நோர்வே வீரர் தோர் ஹஷோவ்ட் வெற்றிபெறறார்.




மலைகளுக்கூடான 168 கிலோ மீற்றர் தூரத்தை சவால்களில்லாமல் மிக லாவகமாக வென்றெடுத்தார். இந்தப் போட்டித் தொடரின் ஆறாவது தொடர் வெற்றிக்காகப போட்டியிடும் அமெரிக்கா ஆம்ஸ் ரோங்கும் அவரது எதிரியான ஜான் உல்ரிச்சும் பின்நிலை அடைந்த போதும முதன்மைக்குழுவில் வந்து சேர்நதனர்.

கடுமையான மழையால் பாதிக்கப்பட்ட இப் போட்டியில் விபததுக்கள் எதுவும் இடம்பெறவில்லை தோர் ஹஷோவ்ட் சுமார் 200மீற்றர் இடைவெளி வித்தியாசத்தில் இப் போட்டியை வென்றாா. எதிர் வரும் போட்டிகள் காலநிலையால் பாதிக்கப்படாமலிருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார். (யே)

## மேரியன் ஜோன்ஸின்
# காதலரும் தோல்வியுற்றார்

தற்பொழுது அமெரிக்காவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் தேர்வுப் போட்டிகளில் ஆண்களுக்கான 100மீற்றர் போட்டியில் வெற்றிபெறுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரிம் மொன்ற் கொமரி தோல்வியடைந்தார்.




பெண்கள் பிரிவில் தோல்விய டைந்த மேரியன் ஜோன்ஸின் காதலரான இவர், தடைசெய் யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனைக் காகக் குற்றம்சுமத்தப்பட்டுள்ளார் மேரியன் ஜோன்சும் இதே பிரச்சி னையில் சிக்கியுள்ளார். இதனால இவர்களது மனோபலம் சீர்கெட் டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

தற்போதைய ஒலிம்பிக் சம்பி யனான மௌரீஸ் கரீன் 9.91விநாடிகளில் 100மீற்றரைக்கடந்து முதலிடத்தைப் பெற்றார். ஜஸ்ரின் கற்லின், ஷோன் கிரா.ஃ.போட் ஆகியோர் தெரிவான ஏனைய வீரர்களாவர். போதைப்பாவனையால் யு.எஸ்.மெய்வல்லுநர் அணி மிகவும் பலவீனமடைந்துள்ளது. (யே)

## இறுதி டெஸ்ட் போட்டி
# நான்காவது நாள் ஆட்டம் அவுஸ்திரேலிய அணி 114-2

தற்பொழுது கெய்சில் நடைபெற்றுவரும் இலங்கைக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்



போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெற் இழப்பிற்கு 114ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் 517ஓட்டங்களுக்கு இலங்கை சகல விக்கெற்களையும் இழந்து 455ஓட்டங்களை எடுத்திருந்தது. 62ஓட்டங்களை மேலதிகமாக வைத்திருந்த அவுஸ்திரேலிய அணி நான்காம் நாள் ஆட்டத்தின்போது இரண்டு விக்கெற்களை. இழந்து 114ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கை மத்தியதர வரிசைத் துடுப்பாட்டக்காரர்களது சிறந்த துடுப்பாட்டம் காரணமாகவும், அது இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாக இருக்குமானால் இப்போட்டி சமநிலையில் முடிவடையும் வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆயினும் இப் போட்டியில் வெற்றி பெறவேண்டிய கட்டாயத்தில் இலங்கை அணியிருக்கிறது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST
ஒலிம்பிக்கிற்கு இன்னும் 32 தினங்கள்

## ஒலிம்பிக் வரலாறு 27
# 2000இல் சிட்னி நகரில் நடந்த 27வது ஒலிம்பிக்

பிட்னியில் இடம்பெற்ற இருபத்தேழாவது ஒலிம்பிக் போட்டிகள் இதுவரை காலமும் இடம்பெற்ற போட்டிகளில் மிகச் சிறந்த போட்டி என வர்ணிக்கப்பட்டது.



பழங்குடிவகுப்பைச் சேர்ந்த காத்தி.ஃ.பிறீமன் கூட்டு நிகழ்ச்சி ஒன்றில் தங்கம்வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக் சுவட்டு நிகழ்ச்சியில் தங்கம் வென்ற முதல் பழங்குடி வீராங்கனை எனும் பெருமையை அவர் பெற்றார்.

பிரிட்டனின் ஸ்ரீவ் ரெட்கிரேவ் 5வது தடவையாகவும், படகுப்போட்டியில் தங்கம்வென்றார். அமெரிக்கர்களான மௌ ரீஸ்கீரின் 100மீற்றரிலும் மைக்கல் ஜோன்சன் 400 மீற்றரிலும் தங்கம் பெற்றனர். ஜோன்சன் இரண்டாவது தடவை இப்பதக்கத்தை வென்றமை ஒரு சாதனையாகும்.

ஒரு ஒலிம்பிக்கில் 5பதக்கங்களை தடகள நிகழ்ச்சியில் வென்ற பெண் எனும் பெருமையை அமெரிக்காவின் மேரியன் ஜோன்ஸ் பெற்றார்.

மூன்று தங்கம் இரண்டு வெள்ளிகள் ஆஸி வீரர் இயன் தோர்ப் நீச்சலில் வென்றார். 400மீற்றர் ஃ.பிறிஸ்டைல் நீச்சலில் அவர் தனது முன்னைய உலகசாதனையை முறியடித்தார்.

ரஷ்ய வீரர் அரக்ஸ் நெமோவ் ஜிம்நாஸ்டிக்கில் ஆறு தங்கங்களை வென்றார். அற்லான்டா ஒலிம்பிக்கிலும் இவர் ஆறு தங்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

சிட்னி ஒலிம்பிக்கில் மறககமுடியாத சம்பவம் ஒன்று உண்டு. ஈகுவடோர் கினியா நாட்டின் மொஸம்பானி எனும் நீச்சல் வீரர் தன்னுடன் போட்டியிட்ட இருவர் தகுதியிழப்புச் செய்யப்பட்டமையால் தனியாகப் போட்டியிட்டார். சுமார் ஆறுமாதமே நீச்சலில் பயிற்சி பெற்ற அவர் நீரில் மூழ்கியும் எழுந்தும் ஒருவாறு தனது தூரத்தைக் கடந்து தெரிவுப்போட்டியில் இடம்பிடித்து பலலட்சம் ரசிகர் மனதைக் கவர்ந்தார். (யே)

# அமெ.புலனாய்வுத்துறை அதிகாரிகளின் யாழ்.வருகைக்கு பலத்த கண்டனம்

இலங்கை இராணுவம் என்பது ஏனைய நாடுகளில் உள்ள இராணுவங்கள் போன்று நாட்டின் பாதுகாப்பு படையல்ல. மாறாக இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிக்க முயல்கின்ற சிங்கள அரசினது எண்ணத்தை நிறைவேற்றி வருகின்ற ஒரு ஆக்கிரமிப்பு படையாகவே செயல்பட்டு வருகிறது. இந்த இராணுவத்தை தமிழ் மக்களாகிய நாம் எந்தக் காலத்திலும் ஏற்றதும் இல்லை. ஏற்கப்போவதுமில்லை. இந்த உண்மையை அமெரிக்க அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

இந்த இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவே நாம் போராடி வருகின்றோம். தமிழ் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கு (தமிழீழ) பகுதிகளில் ஒரு சில பகுதிகளை ஆக்கிரமிப்புச்செய்து இருக்கின்ற இராணுவத்தை ஒருபோதும் எம்மண்ணில் அனுமதிக்கமாட்டோம. இதனையே கடந்த வருடம் எமது பகுதிகளில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வின் மூலமாக சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

"எமது நிலம் எமக்கு வேண்டும்- இராணுவமே

உங்கள் இடங்களுக்குச் செல்லுங்கள்" என்ற

கோஷம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது. எனவே தமது பகுதிகளில் ஆக்கிரமித்து நிற்கின்ற இந்த படை முகாம்களை வந்து பார்வையிட்டுப் பலப்படுத்துவதும், பயிற்சி அளிப்பதும், இரணுவ புலனாய்வு உத்திகளை கற்பிப்பதும் எமக்கு ஆத்திரமூட்டும் செயலாகவே உள்ளது.

அமெரிக்க அரசு விரும்பினால் தமது செயற்பாடுகளை சிங்கள தேசங்களில் மேற்கொள்ளட்டும். எமது பகுதிகளில் எமது இராணுவமான தமிழீழ விடுதலைப்புலிகள் இருக்கட்டும். தமிழ் மக்களாகிய நாம் நிம்மதியாக வாழ வேண்டுமென உண்மையில் அமெரிக்கா விரும்பினால் யாழ்.குடாநாட்டில் படைமுகாமிற்குள்ளும் வானூர்திகளிலும் வந்து பார்வையிட்டு ஆக்கிரமிப்புப் படைகளை பலப்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும்.

அண்மையில் கூட பலாலிப் படைத தளத்திற்குள் வந்து இராணுவ வியூகங்களை வகுத்துக் கொடுத்தமையும் சில வாரங்களுக்கு முன் வானூர்திகளில் பறந்து பார்வையிட்டு இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்களைப் பலப்படுத்தியமையையும் நாம் கண்டிக்கின்றோம்.(உ)

# ஆட்களில்லா வீடுகளில் திருட்டுக் கும்பல் கைவரிசை

(காரைநகர்)

காரைநகர் கோவளத்தில் ஆட்கள் இல்லாத வீடுகளின் கதவு, நிலை, யன்னல், ஓடுகள், மரங்கள் போன்றன களவாடப்பட்டு வருகின்றன. இதனால் பல்வேறு காரணங்களின் நிமித்தம் மீளக்குடியமராதோர் பெரும் சொத்திழப்பிற்கு ஆளாகியுள்ளனர்.

இது தொடர்பாக காரைநகர் வடமேற்கு கிராமசேவையாளரிடமும், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் உயரதிகாரிகள், கிராம சேவகர் உட்பட பொதுமக்களுடன் கலந்துரையாடல் ஒன்றினையும் அண்மையில் நடாத்தியுள்ளனர்.

அத்துடன், இப்பகுதியில் இளைஞர்கள் சிலர் வீதியால் செல்லும் யுவதிகள் மற்றும் பொது மக்களை இம்சைக்கு உள்ளாக்கி வருவது குறித்தும் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

(உ-246)

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**க.பொ.த. (சா/த) கணிதம் பகுதி II தொடர்ச்சி**

10. (a) ஒருவர் **A** என்ற இடத்தில் இருந்து $042^0$ திசை கோளில் பிரயாணம் செய்து **B** என்ற இடத்தை அடைகின் றனர். பின்னர் **B** யில் இருந்து $130^0$ திசைகோளில் பிரயாணம் செய்து **C** என்ற இடத்தை அடைகின்றார். **A**யில் இருந்து **B**யின் தூரமும் **B** யில் இருந்து **C**யின் தூரமும் **8Km** ஆகும். அளவிடைப்படம் வரையாது **A**யில் இருந்து **C**யின் திசை கோளைக் காண்க.


**(b) AC** ஓர் நிலைக்குத்தான வெளிச்சக் கோபுரமாகும். உச்சி **C**யில் இருந்து கோபுரத்தின் அடி **A**யின் கிடைமட் டத்தில் உள்ள கப்பல் **S** இன் இறக்கக் கோணம் $47^0$ ஆகும. கோபுரத்தின் உச்சி **C**யில் இருந்து **10m** கீழே கோபுரத்தில் உள்ள யன்னல் **B**யில் இருந்து கப்பலின் இறக்கக் கோணம் $38^0 15'$ ஆகும்.

**i.** இத்தரவுகளை பருமட்டான உருவில் காட்டுக.

**ii. A,B,C** என்பன ஒரே நிலைக்குத்துக் கோட்டில் உள்ளன. **AB** ஐ $x$ எனவும் **A,S** ஐ $y$ எனவும் கொண்டு திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி $x$, $y$இல் ஒருங்கமை சமன்பாட்டைப் பெறுக.

**iii.** $x$ ஐக் கணிக்க

## கணிதம் பகுதி I விடைகள்

1. n(A) = 6
2. 4 ¼
3. 5 நாட்கள்
4. 1.4
5. $120^0$
6. $2/x^3$
7. சதுரம்
8. 60%
9. $A\hat{C}B$
10. $1001011_{\text{இரண்டு}}$
11. x = 2
12. 143.99
13. y= -x -2
14. $x= 60^0$, $y=120^0$
15. ரூபா 1550
16. 30 வருடங்கள்
17. BN = 3cm
    ON = 4 cm
18. 1 1/6
19. $(A^2 + b^2) = 34$
20. h = 6cm
21. (a-b) = 1
22. x = 2 (a+b) / (a-b)
23. ரூ $12x\ 10^4$
24. y = 3x + 2
25. x = 5
26. 48 $Kmh^{-1}$
27. $A\hat{B}D = 20^0$
28. காலணை இடைவீச்சு = 26
29. 0 (பூச்சியம்)
30. 

மேசையில் இருந்து 4 cm தூரத்தில் மேசைக்கு சமாந்தரமான நேர் கோடாகும்

# நக்கீரன் கோபால் மீதான வழக்கு
# பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு நான்கு வார கால அவகாசம்

(சென்னை)

நக்கிரன் கோபால் மீதான பொடா வழக்கு தொடர்பான நான்கு வாரங்களுக்குள் முடிவெடுக்கும்படி பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு மேல்நீதிமன்றம உத்தரவுவிட்டுள்ளது. துப்பாக்கி போன்ற ஆயுதங்களைச் சட்ட விரோதமாக வைத்திருந்ததாக நக்கீரன் கோபாலைத் தமிழக அரசு பொடா சட்டத்தில் கைது செய்திருந்தது. சென்னை உயர் நீதிமன்றில் அவருக்கு ஜாமீன் வழங்கியுள்ளது.

இதை எதிர்த்து , மேல் நீதிமன்றம் தமிழக அரசு சிறப்பு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதிலகோத்தி நீதிபதிகள் ஜி.பி மாத்தூர், ஏ.கே. மாத்தூர் ஆகியோர் அடங்கிய குழு இம்மனுவை விசாரித்தது.

இதனையடுத்து நக்கீரன் கோபால் மீதான பொடா வழங்குப் பற்றி பரிசீலித்து பொடா மறு ஆய்வுக் குழு நான்கு வாரங்களுக்குள் முடிவு செய்யவேண்டும். எடுக்கப்படும் முடிவை மேல் நீதி மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.


தமிழக அரசு மனு மீதான விசாரணையையும் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனது

கரூரில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலை மீது திருவள்ளுவர் படம் விழுந்தது. இப்பினும் தலைப்பாகையால் அவர் காயமின்றித் தப்பினார்.

கரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருக்குறள் திருவிழாவில் சிறப்பு விருந்தினராக அவர் பங்கேற்றார். அவர் அமர்ந்திருந்தபோது திரைச்சீலையில் கட்டப்பட்டிருந்த மரச் சட்டத்தால் ஆன திருவள்ளுவர் படம் அவரது தலையில் விழுந்தது.

இதனால் லேசான சலசலப்பு ஏற்பட்டது. விழா மண்டப அறையில் சிறிது நேரம் ஓய்வெடுத்த அவர் மீண்டும் விழாவுக்குத் திரும்பினார். அவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. (உ)




# இந்தியச் செய்திகள்



குஜராத் காந்திநகர் தொகுதியிலிருந்து எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் துணைப்பிரதமர் அத்வானி அத்தொகுதியின் பல பகுதிகளுக்குச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

# முத்திரைத்தாள் மோசடி விவகாரம்; திடுக்கிடும் புதிய தகவல்கள் !

(புதுடில்லி)

முத்திரைத்தாள் மோசடி விவகாரத்தில் காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தொடர்பு உள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இநதப் பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதாக் கட்சி எழுப்ப முயன்றபோது சபையில் கடும் வாக்குவாதமும் அமளிதுமளியும் ஏற்பட்டு சபை ஒத்திவைக்கப்பட்டது.

முத்திரைத்தாள் மோசடி விவகாரத்தில் தினமும் ஒவ்வொரு தகவல் வெளியாகிவருவதுடன், இவை அதிர்ச்சியூட்டும் தகவல்களாகவே உள்ளன. கர்நாடக மாநிலத்தின் முன்னாள் பொலிஸ் அதிகாரி சாங்ராம்சிங்கும் இந்த வழக்கில் சிக்கி உள்ளார்.

சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்ட இவர் பெங்களூரில் உள்ள மெற்றோபாலிடம் கோர்ட்டில் வியாழனன்று ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது அவர் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதன்போது முத்திரைத்தாள் மோசடியில் கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா, மத்திய மந்திரி குலாம் நபி ஆசாத், தற்போதைய கர்நாடக வளத்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் முன்னாள் அமைச்சர் ஒருவர் ஆகியோர் தன்னைப் பலிக்கடா ஆக்கிவிட்டதாக அவர் கூறியிருந்தார்.

மேலும், ராஜ்குமார் கடத்தப்பட்ட விவகாரத்தில் நடிகர் ரஜினியின் மேலாளரிடம் தான் ரூ.20 கோடி கொடுத்ததாகவும் அவர் கூறியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுகள் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து நகடிகர் ரஜினிகாந்த் வீட்டில் சி.பி.ஐயின் சோதனை நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், வெறும் வதந்தி என்பது பிறகு தெரியவந்தது.

இதனிடையே, முத்திரைத்தாள் மோசடி விவகாரம் பாராளுமன்ற லோக்சபையிலும் எதிரொலித்தது. இந்த மோசடியில் எஸ்.எம்.கிருஷ்ணா, மத்திய மந்திரி குலாம் நபி ஆசாத் ஆகியோரது பெயர்கள் அடிபடுவதை பா.ஜ.க. எழுப்ப முயன்றபோது சபையில் கடும்வாக்குவாதம் ஏற்பட்டது.

முன்னாள் மத்திய அமைச்சர் ஆனந்த்குமார் இதுபற்றி கொடுத்த ஒரு நோட்டீசை சபாநாயகர் சோமநாத் சாட்டர்ஜி நிராகரித்தார். சபையில் உறுப்பினராக இல்லாத ஒருவரை பற்றி எப்படிக் குற்றம் சாட்டலாம்? என்று சாட்டர்ஜி அதனை நிராகரித்துள்ளார்.

எனினும், முத்திரைத்தாள் மோசடியில் மத்திய மந்திரி குலாம் நபி ஆசாத், முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோரது பெயர்களை முன்னாள் பொலிஸ் அதிகாரி சாங்ராம்சிங் குறிப்பிட்டு கூறியிருப்பதை ஆனந்தகுமார் சுட்டிக்காட்டினார். வீரப்பனால் ராஜ்குமார் கடத்தப்பட்ட விஷயத்தில் சாங்ராம்சிங் தெரிவித்த தகவல்களையும் அவர் சபையில் எடுத்துக் கூறினார்.

இதையடுத்து, லாலு பிரசாத் கட்சி உறுப்பினர் ராம்கிருபால் யாதவ், முத்திரைத்தாள் மோசடிக் குற்றவாளிகள் தெல்கி மற்றும் கோடேவுடன் ஜார்ஜ் பெர்னாண்டஸ் இருப்பது போல ஒரு படத்தை சபையில் காட்டினார். இதனால் சபையில் பெரும குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபையை சபாநாயகர் ஒத்திவைத்ததாகத் தெரியவருகிறது. (உ-18)

தவமறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று - குறள்

வலம்புரி

## இலங்கை அரசுக்கு முண்டு கொடுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம்

'பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுதல்' எனத் தமிழில் ஒரு பழமொழியுண்டு. இப் பழமொழியின் உண்மைத் தன்மை உலகின் பொலிஸ் காரரான அமெரிக்காவுக்கு நன்கு பொருந்தும்.

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஆர்வத்துடன் செயற்படுவது போலக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா, உலகில் நடைபெறும் அனைத்துக் குழப்பங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருப்பது வெளிப்படாத உண்மையாகும்.

உலக நாடுகளில் நாடுகளுக்கிடையே- நாட்டுக்குள்ளே-இனங்களுக்கிடையே எனப் பல கோணங்களில் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு அதனூடாகத் தனது ஆயுதங்களுக்குத் தகுந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் அமெரிக்காவின் நரித்தந்திரம் அதன் அகத் தோற்றமாகும்.

ஒஸாமா பின்லேடனுக்கு ஆயுதம் வழங்கி அவனை தனது அடியாளாகப் பயன்படுத்திய அமெரிக்கா இறுதியில் அவனிடமே பாடங்கற்றுக் கொண்டது.

எனினும், தனது நரித்தந்திரத்தை மாற்றிக் கொள்ளும் எண்ணம் அமெரிக்காவுக்கில்லை என்பதை இலங்கைக் கடற்படைக்கு வழங்கிய யுத்தக் கப்பல் உறுதி செய்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவது அவசியம். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்காவின் உதவி என்றும் இருக்கும் என்றெல்லாம் உரத்துக் குரல் கொடுத்த அமெரிக்கா இப்போது இலங்கைக் கடற்படையின் பயன்பாட்டிற்கென தனது நாட்டில் உற்பத்திசெய்த யுத்தக் கப்பல் ஒன்றை வழங்கியுள்ளது.

யுத்தத்தால் அழிந்து போய் மக்கள் நிம்மதியற்று வாழும் இலங்கைக்கு யுத்தக் கப்பல்தான் அவசிய தேவையாகவுள்ளதா? அவ்வாறு யுத்தக் கப்பல் இலங்கைக் கடற்படைக்கு அவசர தேவையாயின் எந்த நாட்டால் இலங்கைக்கு ஆபத்து வரப் போகின்றது?

அப்படியேதேனும் நாடுகளுடன் இலங்கைக்கு எல்லைச் சண்டையிருப்பதாகத் தெரியவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் மீது கொண்டுள்ள பயத்தின் காரணமாகவே யுத்தக் கப்பலை அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்ய வேண்டியதாக இருந்ததெனக் கூறின் அதுவும் பொருத்தமான காரணமாக இருக்காது.

ஏனெனில், விடுதலைப் புலிகளுடன் அரசு யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் நாட்டில் யுத்தம் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை.

இரு தரப்பும் யுத்தத்தை முன்னெடுப்பதில்லையென்பதே ஒப்பந்தமாகும். எனவே இந் நிலையில் அமெரிக்காவிடம் யுத்தக் கப்பலை இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளதெனில் மீண்டுமோர் யுத்தத்திற்கு அரசு தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறதென்பதே மறைமுகமான செய்தியாகும். விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துவிட்டு யுத்தம் செய்வது மட்டுமே யுத்த நிறுத்த மீறலாகாது. மேலாக யுத்தத்தற்கான ஆயுதங்கள், தளபாடங்கள் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதும் யுத்த நிறுத்த மீறலாகவே கருதப்படும்.

ஆக, இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென கூறிவரும் அமெரிக்கா, இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு யுத்தத்தை நிறுத்தியுள்ள வேளையில், இலங்கைக்குப் போர்க் கப்பலை வழங்கியிருப்பது, பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டி விடும் செயலாகும்.

உலகில் நல்ல பெயரைப் பெற்றுக் கொள்வதற்காக சமாதானமும்; வருமானத்தைப் பெறுவதற்காக ஆயுத விற்பனையும் அமெரிக்காவின் இரண்டு பக்கங்கள். இதில் முன்னையது வெளித் தோற்றம். பின்னையது, உட்தோற்றம். இத்தகைய இரு வேடதாரியாக இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் அமெரிக்கா மீண்டுமோர் யுத்தத்தை இலங்கையில் ஏற்படுத்த முயற்சிப்பது திரைமறைவில் உள்ள உண்மை.

## அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில்
# அமைச்சர் டக்ளஸின் அலுவலகத்தை இடம்மாற்ற ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்புக் கருதி அவரது அமைச்சு அலுவலகத்தை வேறு ஓரிடத்துக்கு இடமாற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த புதனன்று அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தாவை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்தே அமைச்சு அலுவலகத்தை கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாவத்தையில் அமைந்துள்ள பாரிய பொருளாதார ஆணைக்குழுவின் கட்டடத்திற்கு இடமாற்றுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதியின் இந்த இடமாற்றப் பணிப்புரையை அமைச்சர் டக்ளஸ் ஏற்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அமைச்சு அலுவலகத்தை இடமாற்றுவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள பாரிய பொருளாதார ஆணைக்குழுக் கட்டடமானது அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதால் இலகுவில் யாரும் அப்பகுதிக்குச் செல்ல முடியாது. இந் நிலையிலேயே இங்கு அமைச்சை இடமாற்றுவதற்கு ஜனாதிபதி பணித்திருந்தார்.

இதேவேளை, கடந்த 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சராகவிருந்த டக்ளஸ் தேவானத்தா தனது அமைச்சு அலுவலகத்தை மேற்படி கட்டடத்திலேயே அமைத்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (உ-18)

மத்தியத்தின் வெளியீடுகள் வரிசையில்
# 4 கணனி சார் நூல்கள் நாளை ஒன்றாக வெளியீடு

(யாழ்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தனது "மத்தியத்தின் வெளியடுகள்" வரிசையில் 4 கணனி சார் நூல்களையும் அதன் தொகுப்பாகிய இறுவெட்டு ஒன்றையும் வெளியிடவுள்ளது.

நாளை புதன்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கணனிப் போதனாசிரியர் க. கமலசேகரத்தின் ஆக்கத்தில் உருவான க.பொ. த. உயர்தர மாணவர்களின் பொதுத் தகவல தொழில்நுட்பப் பாடத் திட்டத்துக்கு ஏற்றதான கணனியின் வரலாறு,மற்றும் கணனி பயில்பவர்களுக்கான சிறப்பான கணனி தட்ச்சு நெறி பயில்பவர்களுக்கு மிக அத்தியாவசியமான வழிகாட்டியும்பயிற்சி நூலுமான கணனி விசைப்பலகை, கணனி தட்டச்சு -தமிழ், கணனி தட்டச்சு -ஆங்கிலம் ஆகிய நூல்களும் இவற்றை உள்ளடக்கிய இறுவெட்டு (சிடி)யும் வெளியிடப்படவுள்ளது.

மத்தியத்தின் முன்னைய வெயியீடுகளான க.பொ.த. சாதாரண தரத்திற்கான உடற்கல்வி நூல், க.பொ. த. உயர்தரத்திற்கான நாடகமும் அரங்கியலும் அதிபர்களுக்கும நிர்வாகிகளுக்கும் உள்ள நிதிப்பிரமாணங்கள் என்பனவற்றின் வரிசையில் இந் 4 நூல்களும் அடங்குகின்றன.

இந்நிகழ்வில், யாழ்ப்பாண கல்விவலயத்தினால் கல்லூரியின் முறைசாராப் பிரிவின் ஊடாக கணனிக் கல்வி நெறி பயின்ற மாணவர்களுக்கும் ஏற்கனவே மினி இன்போ ரெல் (**Mini INFORTEL**) நிறுவனத்தின் கண்காட்சியில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதால் அவர்களும் இந் நிகழ்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

நூல்களை தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருண், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ.பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதி ம.நடராஜசுந்தரன், யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. தங்கராசா ஆகியோர் வெளியிட்டு வைக்கவுள்ளனர். (உ)

# அரசின் வழிநடத்தலுக்கு கிடைத்த அங்கீகாரமே மாகாணசபை வெற்றி

ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற வெற்றியானது கூட்டணி அரசாங்கத்தின் வழிநடத்தலை மக்கள் உறுதிசெய்ததன் பலனேயாகுமென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடந்த இருமாத காலமாக மக்களுக்கு ஆற்றிய சேவையின் அடிப்படையிலேயே தற்போதும் மாகாணசபைத் தேர்தலில் சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளது.

மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சியமைத்த கூட்டணி அரசாங்கம் தற்போதும் வெற்றியடைந்துள்ளதெனில் மக்களின் உறுதிப்படுத்தலே காரணமாகும்.

எனினும் கூட்டணி அரசாங்கத்தின் கடந்த இருமாத ஆட்சிக் காலத்தில் அதன் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து விமர்சித்து வந்தது: இந்நிலையிலும் அரசாங்கம் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-61,18)

ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நோயும "நான்" என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இந்த உலகம் சோகமயமானது. இதனை நீ உணர்ந்து நடப்பாயாக. எப்போதும் சந்தோஷமாக இருப்பவனே மனிதன் எனப் படுவான்.

சுவாமி விவேகானந்தர்

மாத்தளை மாவட்ட

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளின் அங்கத்துவம் அற்றுப் போனது

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் 15 வருடங்களாக மாத்தளை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கிடைத்து வந்த பிரதிநிதித்துவம் இம்முறை அற்றுப்போய் உள்ளது.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரும் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பிரதிநிதி ஒருவரும் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழ் பிரதிநிதி ஒருவரும் தெரிவாகியிருந்தனர்.

எனினும், இறுதியாக நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் இருந்து சிறுபான்மைச் சமூகத்தினர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. (உ-121)

# வாழைச்சேனையில் பாதுகாப்புப் பலம்

(வாழைச்சேனை)

வாழைச்சேனைப் பிரதேசத்தில் தற்போது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாம் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

வாழைசசேனையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது கடந்த சனியன்று இரவு 7.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக இதுவரை எவரும கைது செய்யப்படவில்லை .

ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும், பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றார்கள். இரு தரப்பினருக்கும் இடையே சில நிமிடங்கள் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன.

இச்சம்பவத்தினை அடுத்து அப் பிரதேசத்தில் முழுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வாழைச்சேனை பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறியுள்ளார்.

இச சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-121)

கடத்தல்காரரின்
# பெயர் விபரங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றபோது பொலிஸாரல் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்கள் தம்மைச் சட்ட விரோதமாகக் கடத்திச் சென்றவர்களின் பெயர் விபரங்களை மிகத் தெளிவாக தெரிவிக்க வேண்டும் என சட்டமா அதிபர் கேட்டுள்ளார்.

அவ்வாறு சரியான தகவல்களை வழங்குபவர்களை விரைவில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சட்டமா அதிபர் 'சகல நீதிவான் நீதிமன்றங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

(உ-60,10)

# மாகாண ஆளுநர்கள் விரைவில் நியமனமாவர்

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை தேர்தல நடைபெற்ற 6 மாகாண சபைகளுக்கும் விரைவில் முதலமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என 6 மாகாணங்களினதும் ஆளுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவர்களின் பெயர்களை விரைவில் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் எனவும் அதனையடுத்து இவர்கள் தமக்குரிய பதவிகளை பொறுப்பேற்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-60,10)

# கூட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு-6, இல 112, காலி வீதியில் அமைந்துள்ள 'ரண்முத்து ஹோட்டலில்' ஒன்றியத் தலைவர் ஆர்.துரைரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-43)

# இலங்கையில் முதலிட வருமாறுஇந்திய முதலீட்டாளர்களுக்கு நோர்வே அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தமது முதலீடுகளை மேற்கொள்ளுமாறு இந்திய முதலீட்டாளர்களை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் கேட்டுள்ளார்.

இந்தியாவுக்குச் சென்ற வாரம் விஜயம் செய்த அமைச்சர் ஜோன் பீற்றர்சன் புதுடில்லியில் உள்ள இந்திய சர்வதேச நிலையத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கான நடவடிக்கையில் இருதரப்பினரும் ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்த நிறுத்தத்தை இருதரப்பினரும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். எனவே இத்தகைய சாதகமான சூழ்நிலையை இந்திய முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகளினதும் அரசியல் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவென ஒஸ்லோவில் எதிர்வரும் நவம்பர் மாதம் மாநாடொன்று நடத்தப்படவுள்ளது.

பல்வேறு நாடுகளினதும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இநத மாநாட்டின் போது உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு நிதியுதவியும் கோரப்படுமென்றும் பீற்றர்சன் தெரிவித்தார். (உ-60,10)



கப்டன் வானதி வெளியீட்டகத்தால் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட மூத்தபெண் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்வினைப் படங்களில் காணலாம்

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்பட்டு வரும் சமகால அரசியல் கருத்தரங்கின் 15ஆவது தொடர் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் 'சமகாலமும் சமூக அபிவிருத்தியும்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ரட்ணம் கருத்துரை வழங்கவுள்ளார். (ச)

## ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வுகள் இன்று காலை 11.30 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) எஸ்.தியாகராசா மற்றும் யாழ். வலய ஆங்கில சேவை ஆலோசகர் என்.பரிமேலழகப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ச)

## புலிகள்..

பாதுகாபபு வலயங்களில் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் நடைபெறும் கொலைக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளும் கூடிய கவனம் எடுக்க வேண்டுமென இராணுவத் தரப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-13)

# மாகாணசபைத் தேர்தல்கள் உத்தியோக பூர்வ முடிபுகள்

நடந்து முடிந்த ஆறு மாகாண சபைகளுக்குமான (போனஸ்ஆசனம் உட்பட) தேர்தல் முடிபுகளைத் தேர்தல் திணைக்களம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மேல் மாகாண சபையில் 104 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 59 ஆசனங்களையும்,ஐக்கிய தேசியக் கட்சி 39 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், மேல் மாகாண மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களையும்,

தென்மாகாண சபையின் 55 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 36 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 19 ஆசனங்களையும்,மத்திய மாகாண சபையின் 58 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 30 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 26 ஆசனங்களையும் மலையக மக்கள் முன்னணி 2 ஆசனங்களையும்.

வடமத்திய மாகாண சபையின் 33 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 22 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 10 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும்,ஊவா மாகாண சபையில் 33 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 21 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கடசி 12 ஆசனங்களையும் மலையக மககள் முன்னணி ஒரு ஆசனத்தையும்.

சப்பிரகமுவ மாகாண சபையின் 44 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 28 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 15 ஆசனங்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.(ம)

# விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்

## அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் வைத்திருக்க அவுஸ்திரேலியா முடிபெடுத்துள்ளதாக அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பான தொழிற் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மேர்வி கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளித்த போதே வெளிவிவகார அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் பாராளுமன்றத்திற்கு 22 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையையும் தாம் ஏற்றுக் கொண்டுள்ளதைச் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துள்ளார்களென ஜோன் மேர்வி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தியிருந்ததாக சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள் முறையிட்டுள்ளன.

அவுஸ்திரேலிய அரசாங்கம் ஐக்கிய இலங்கையின் கீழ் சகல இலங்கையீனரதும் உரிமைகளும், பாதுகாப்பும் பேணப்படுவதையே விரும்புவதாகவும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-121)

## மாகாண....

வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மாகாண சபைகளில் எந்த அமைச்சுப் பொறுப்புகளையும் தாம் ஏற்கப் போவது இல்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாகாண சபை முறை அவசிய மற்றது எனக் கருதும் நிலையில் அதனைப் பலப்படுத்தும் அவசியம் ஜே.வி.பிக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள விமல் வீரவன்ச மாகாண சபைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை கூட்டு முன்னணி என்ற வகையில் குறிப்பிட்ட குழு இணைந்து திட்டமிடும் எனத் தெரிவித்துள்ளார். (ச)

## நோர்வேத்...

ளது.

இது இவ்வாறிருக்க தற்போதைய அரசியல் நிலை, யுத்த நிறுத்த ஏற்பாடுகள், கிழக்கு மாகாண நிலைபரங்கள குறித்தும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறு ஹெவ்டே நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## தலைமையகத்..

தயா சந்தகிரி நியமிக்கபடவிருந்தார்.

எனினும் அதனை தரைப்படையினர் விரும்பவில்லை. இதனையடுத்து இப் பதவிக்கு ஒருவரை நியமிப்பதற்காகக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு படைத் தலைமையகத்தின் புதிய தளபதியாக யாரை நியமிப்பதென்பது தொடர்பாக ஆராய்ந்து முடிபெடுக்கும்.

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட இம் மாதம் முதல் கடமையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முப்படைத்..

குடாநாட்டின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடிக்குச் சென்ற அமைச்சர் அங்கு பயணிகளின் குறைநிறைகளையும் கேட்டறிந்தார்.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற பின் முதன் முறையாக நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-43)

## சமாதானப்...

யில் செயற்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தவுள்ளேன்.

அதேநேரம் விடுதலைப் புலிகள் தங்களின் கருத்துகளை இலங்கை வானொலி மூலம் தெரிவிக்க விரும்பினால் அதற்கு இடந்தர அரசாங்கம் தயாராக இருக்கிறது. கருணா தனது கருத்துக்களைத தெரிவிப்பதற்கு எவ்வளவு நேரம் வழங்கப்பட்டதோ அதேயளவு நேரம் விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வழங்கப்படும். இதில் எவ்வித தடைகளும் இருக்காது.

மேலும் கருணாவுடன் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு வைத்திருப்பதால் அது அரசாங்கத்துடனான தொடர்பு என்று அர்த்தப்படுத்தலாகது.

ஏனெனில் டக்ளஸ் தேவானந்தா தனிப்பட்ட முறையில் கருணாவுடன் தொடர்பு வைத்துள்ளார். அதற்காக அரசாங்கம் இதனைப் பொறுபபேற்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம)


சங்குநாதம்

மேற்குலகப் பிரசன்னத்தின் முக்கியத்துவம்
-பேநுகு யேசுதாசன

ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை...
-நோயல்

சமாதானம் சாத்தியமா?
-பத்மன்

அலெக்ஸ் பரந்தாமன் எழுதும்
என்னைப் ... வைத்தவள்




ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், சினிமாச் சிதறல் மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்...

வெள்ளி ... உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.